பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 02 திங்கட்கிழமை (16.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :171

# தாயகம் திரும்பிய அகதிகளில் 7 பேர் தலைமன்னார் கடலில் மூழ்கிப் பலி!

## படகு கவிழ்ந்து பரிதாபம்

மன்னார்,மே16

தமிழ்நாட்டிலிருந்து படகு மூலம் தாயகம் திரும்பிக்கொண்டிருந்த 7 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். நேற்றுமுன்தினம் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தியக் கரையில் இருந்து ஈழத்தமிழர்கள் 14 பேரை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட மீன்பிடிப்படகு மோசமான காலநிலைக்குள் சிக்கிக் கொண்டதால் இந்த அவலம் ஏற்பட்டது.

படகு கவிழ்ந்து அதிலிருந்த 14 பேரும் கடலில் வீசப்பட்டனர். அவர்களில் 7பேர் நீந்தி இலங்கை எல்லைக்குள் இருந்த மணற்திட்டிகளில் கரைசேர்ந்தனர். ஏனைய 7 பேரையும் காணவில்லை. அவர்கள் அனைவரும் இறந்திருக்கலாம் என்று அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இவர்கள் பயணித்த படகு தமிழகம், இராமநாதபுரம் கரையோரத்தில் இருந்து இரவு 11 மணியளவில் தலைமன்னார் நோக்கிப் புறப்பட்டது. நடுக்கடலில் மோசமான காலநிலைக்குள் படகு சிக்கிக்கொண்டது. இதனால் நிலை தடுமாறிக் கவிழ்ந்தது என்று தப்பி வந்தவர்கள் கூறினர்.

தலைமன்னார் கடற்பரப்பில் வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படை

(14ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலியில் சிப்பாய் சுடப்பட்டு மரணம்!

யாழ்ப்பாணம்,மே16

கிளாலி இராணுவ முகாமில் நேற்றுக் காலை 5 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொரு சிப்பாய் அபாயகரமான நிலையில் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பல்வத்தையை சேர்ந்த ரி.எம்.ரஞ்சித் ஜயவீர பண்டார என்ற சிப்பாயே இதில் கொல்லப்பட்டவர். தொட்டபொலவைச் சேர்ந்த அபயசிங்க குணவர்த்தன ரவீந்திரா என்ற சிப்பாய் காயமடைந்துள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் நாடுகளின் கண்டிக் கூட்டத்தில்

# விரைவில் பொதுக்கட்டமைப்பு என இன்று உறுதியளிப்பார் ஜனாதிபதி!

## நாளை இரவு அது குறித்து அவர் ஜே.வி.பியினருடன் முக்கிய பேச்சு

கொழும்பு,மே16

**ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக இலங்கை அரசு விடுதலைப் புலிகளோடு ஓர் இணக்கத்துக்கு வரும் என்ற உறுதி மொழியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று பகிரங்கமாக அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

**இலங்கைக்கு உதவும் நாடுகளின் முக்கிய கூட்டம் இன்று கண்டியில் ஆரம்பமாகிறது. அதில் ஆரம்ப உரை நிகழ்த்துகையிலேயே சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் மத்தியில் வைத்து இது பற்றிய அறிவிப்பை அவர் விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

புலிகளோடு இதுவிடயமாகத் தனது அரசு செய்துகொள்ளவுள்ள இணக்க ஏற்பாடுகளுக்கு தனது அரசின் பிரதான பங்காளிக்கட்சியினரான ஜே.வி.பியினரின் ஆதரவையும் பெற்றுக் கொள்வதற்காக நாளை இரவு அக்கட்சியின் தலைவர்களோடு அவர் மந்திராலோசனை நடத்தவிருக்கிறார் எனத் தெரிகின்றது.

புலிகளோடு தாம் செய்ய உத்தேசித்திருக்கும் இணக்க ஏற்பாடுகள் குறித்து இன்று மேலோட்டமாகக் கண்டிக் கூட்டத்தில் தொட்டுக்காட்டும் ஜனாதிபதி நாளை ஜே.வி.பியினருடன் நடைபெறும் கூட்டத்தில் அந்த ஏற்பாடு

(14ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகாவைச் சந்திக்க காத்திருக்கும் அகாஷி!

ஒரு வாரகால விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ள இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி கொழும்பில் அரசியல் பிரமுகர்களையும் வன்னியில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களையும் சந்தித்தபோதிலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இதுவரை சந்தித்துப் பேசமுடியாத நிலை அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை யசூசி அகாஷி சந்திப்பதற்கான நேர அனுமதியை கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்திடம் கோரியிருந்தது. ஆனாலும் ஜானதிபதி குமாரதுங்க இந்தியா செல்லவுள்ளார் எனத் தெரிவித்து சந்திப்புக்கான நேர ஒதுக்கீட்டை

(14ஆம் பக்கம் பார்க்க)

# கண்டி மாநாட்டை இன்று காலை ஜனாதிபதி ஆரம்பித்துவைப்பார்

கொழும்பு,மே16

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அமைப்பின் இருநாள் மாநாடு இன்று கண்டியில் ஆரம்பமாகவுள்ளது. இன்று காலை 9.30 மணிக்கு கண்டி ஏர்ள்ஸ் ரிஜன்ஸி ஹோட்டலில் மாநாட்டை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆரம்பித்துவைப்பார்.

மாநாடு நடைபெறுவதையொட்டி கண்டி நகரின் பாதுகாப்பு என்றுமில்லாதவாறு பலப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் கண்டி நகரின் பிரதான பாதைகள் இன்றும் நாளையும் போக்குவரத்துக்குத் தடைப்பட்டிருக்கும். கண்டி நகருக்குள் இடம்பெறும் வாகனப் போக்குவரத்துக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)



சமர் ஒன்றின்போது இரு கண்களையும் இழந்த போராளியான இதயராஜின் மிருதங்க அரங்கேற்றம் நேற்றுமுன்தினம் நவம் அறிவுக்கூடத்தில் இடம்பெற்றது. இதனை முன்னிட்டு போராளிக் கலைஞன் இதயராஜுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வாழ்த்துத் தெரிவித்தார். அப்போது இதயராஜுடன் தலைவர் பிரபா எடுத்துக்கொண்ட படம்.

# தமிழீழத் தேசிய மருத்துவமனைக்கு இரணைமடுப் பகுதியில் அடிக்கல்!

கிளிநொச்சி,மே16

தமிழீழத் தேசிய மருத்துவமனைக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது. 22 கோடி ரூபா செலவில் கிளிநொச்சி இரணைமடுவில் இந்த மருத்துவமனை அமைக்கப்படவுள்ளது.

நேற்று முற்பகல் 9.30 மணியளவில் அடிக்கல் நடும் நிகழ்வு ஆரம்பித்தது. முதன்மைச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார்.



அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மருத்துவமனைக்கான அடிக்கல் ஒன்றை நட்டு வைக்கிறார்.

தாயக மருத்துவமனைக்கான முதலாவது அடிக்கல்லினை மருத்துவர் கெங்காதரன் நட்டார். இரண்டாவது கல்லினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நட்டார்.

அங்கு உரையாற்றிய அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்ததாவது:-

இன்றைய நாள் ஒரு முக்கிய மானநாள். தமிழர் தாயகத்திலேயே எங்கள் மக்களுக்கான மருத்துவ, [illegible]

(14ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்புக் குறித்து ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விளக்கமளிப்பார்

கொழும்பு,மே16

பொதுக்கட்டமைப்புக் குறித்து மக்களுக்கு முழுமையான விளக்கமளிப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று இரவு 9 மணிக்கு நாட்டு மக்களுக்கான அதிமுக்கியத்துவம் வாய்ந்த - உரையொன்றை ஆற்றவிருக்கின்றார்.

நேற்று ஜனாதிபதி மாளிகையில் தமக்கு மிக நெருக்கமான அமைச்சர்கள் சிலரை அழைத்து ஜனாதிபதி நீண்டநேரம் ஆலோசனை நடத்தினார். அப்போதே இந்தத் தீர்மா

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடாநாட்டில் டெங்கு ஒழிப்பு வாரம்

குருநகர்,மே16

யாழ். மாவட்டத்தில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரையான ஒரு வார காலப் பகுதியில் டெங்கு ஒழிப்பு வாரமாகப் பிரகடனம் செய்யப் பட்டுள்ளது.

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் இந்த டெங்கு ஒழிப்பு வாரத்தைப் பிரகடனம் செய்துள்ளது.

டெங்கு ஒழிப்பு வாரத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான விட யங்களை உள்ளடக்கிய சுற்றறிக்கைகள் மேற் படி அலுவலகத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள திணைக்களத் தலைவர்கள், சகல வைத்திய சாலைக்கும் பொறுப்பான பொறுப்பு வைத்திய அதிகாரிகள், யாழ். மாநகர சபையின் ஆணையாளர், பிரதேச செயலர்கள், நகர சபைகள், பிரதேசசபைகளின் செயலாளர்கள், பாடசாலை அதிபர்கள், தனியார் நிறுவன உரிமையாளர் கள், முகாமையாளர்கள், அரச சார்பற்ற நிறுவ னங்களின் தலைவர்கள், இணைப்பாளர்கள், சமய சமூக அமைப்புகளின் தலைவர்கள் ஆகி யோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாரத்தில் டெங்குக் காய்ச்சல் பற்றிய விழிப்புணர்ச்சியை பொதுமக்கள் மத்தியில் ஏற் படுத்தும் நோக்குடன் தகவல் தொடர்பு சாத னங்கள் பொதுமக்களுக்கான விளம்பர அறி வித்தல்கள் கிராம மட்டம் மற்றும் நிறுவன மட்டங்களில் விழிப்புணர்ச்சிக் கூட்டங்கள் ஆகி யன நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

இந்த விழிப்புணர்வுக் கூட்டங்களை சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர் கள் நடத்துவர்.

டெங்குக் காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மட்டுமல்லாது டெங்குக் காய்ச் சலைப் பரப்பும் நுளம்பை அழித்து ஒழிக்கும் நோக்குடன் இவ்வாரத்தில் பல மட்டங்களிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள் ளன. இந்தச் சிரமதானப் பணிகள் திணைக் கள, நிறுவன, கிராம, பாடசாலை மற்றும் குடி யிருப்பாளர்கள் மட்டங்களில் நடைமுறைப் படுத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

திணைக்களத்தில் சிரமதானப் பணியை மேற்பார்வை செய்து அமுல் நடத்த திணைக் களத் தலைவரும் நிறுவனத்தில் இதனை நடை முறைப்படுத்த நிறுவனத் தலைவரும், பொது இடங்களில் நடைமுறைப்படுத்த கிராம அபிவி ருத்திச் சங்கங்களும், பாடசாலைகளில் இதனை நடைமுறைப்படுத்த பாடசாலை அதிபர்களும் பொறுப்பாக இருப்பார்கள்.

அதேநேரத்தில் குடியிருப்பாளர்கள் ஒவ்வொ ருவரும் தத்தமது வீடுகளில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

வீடுகள் மற்றும் திணைக்களங்களில் உள்ள பற்றைகளை அழித்து சுத்தப்படுத்துவதுடன் நீர் தேங்கி நிற்கும் இடங்களைத் துப்புரவு செய்து நீரைத் தேங்கவிடாமலும், சிரமதானப்பணி மேற்கொள்ளப்படவேண்டும். டெங்கு ஒழிப்பு வார முடிவில் பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் மாவட்டத்தின் பல இடங்களுக்கும் சென்று இவ்வேலைத்திட்டங்களை ஆய்வுசெய்வார்கள் என்றும் சுகாதாரத் திணைக்களத்தின் செய் திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-51)

# கை, கால் கட்டிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு!

## மட்டக்களப்பில் நேற்றுச் சம்பவம்

ஏறாவூர்,மே16

மட்டக்களப்பு தலைமையகப் பொலீஸ் பிரி விற்குட்பட்ட ஞானசூரியம் சதுக்கத்தில் துப் பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இளைஞனின் சடலமொன்றை மட்டக்களப்பு பொலீஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கண்டெடுத்துள்ளனர்.

சுமார் 14 முதல் 18 வயது வரை மதிக்கத் தக்க இளைஞனின் இந்தச் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று மட்டக் களப்பு பொலீஸார் தெரிவித்தனர்.

கைகள் மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலை யில் சடலத்தின் தலையிலும், மார்பிலும் மூன்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

மரண விசாரணைகளுக்காகவும் அடையா ளம் காண்பதற்காகவும் சடலம் தற்போது மட் டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது எனப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

வேறொரு பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் இப்பகுதிக்கு கடத்திவரப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்ட பின்னர் வீதியில் போடப்பட்டிருக் கலாம் என்று பொலீஸார் சந்தேகம் வெளியிட் டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக புலன் விசாரணைகளை ஏறாவூர் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-3)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

தீவகம் தெற்கு, வேலணை பிரதேச செய லர் பிரிவிற்கான மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிர தேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

வேலணை உதவிப் பிரதேச செயலர் முநந்த கோபாலன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொள்வர்.

# வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த நூலக விழிப்புணர்வு நிறுவகம்

## புதனன்று அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே16

குடாநாட்டில் வாசிப்புப் பழக்கத்தை மேம் படுத்துவதற்கென நூலக விழிப்புணர்வு நிறு வகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக் கப்படவுள்ளது.

இந்த நிறுவகத்தின் அறிமுக வைபவமும் பொதுக் கூட்டமும் நாளைமறுதினம் புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள் ளன.

பொதுசன நூலகங்கள், கல்விசார் நூலகங் கள், சனசமூக நிலைய நூலகங்கள், ஏனைய நிறுவக நூலகங்கள் போன்றன தங்கள் அமைப்பு நோக்கங்களுக்கேற்ப சேவையாற்றுவதற்கும்-

நூலக ஆளணியினருக்கும் பணிசார் பயிற்சி களை வழங்கி அவர்களின் அறிவையும் திறனை யும் மேம்படுத்துவதற்குமாக இந்த நிறுவகம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

நூலக ஆளணியினர், நூலக சேவைகளை நிர்வகிப்போர், வாசிக்கும் சமூகம் ஒன்றின் அவ சியத்தை உணர்ந்து அதனை ஊக்குவிக்க விழைவோர் மற்றும் வாசகர் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (எ-203)

# சமய சந்நிதிகளில்

வேரவில்,மே16

வேரவில் வெள்ளிப்பள்ளத்து ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெரும் திருவிழா கடந்த 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகியது. தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை முற் பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (எ-323-203)

★ ★ ★

கரவெட்டி,மே16

நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெரும் திருவிழா கடந்த 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி யது. தொடர்ந்து 10தினங்கள் திருவிழா நடை பெறும்.

எதிர்வரும் 22ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ-70-203)

★ ★ ★

தொல்புரம்,மே16

தொல்புரம் கொட்டியம்பதி ஸ்ரீ ஆதி முத்து மாரி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம் மாகி நடைபெற்றுவருகிறது.

15 தினங்கள் இத்திருவிழா நடைபெறும். எதிர்வரும் 22ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

மாலை வேளைகளில் தொடர் சொற்பொழிவு நடைபெற்று வருகிறது. (எ-119-204)

# குண்டுத் தாக்குதலில் குடும்பஸ்தர் மரணம்!

அம்பாறை,மே16

அக்கரைப்பற்றில் ஆழிப்பேரலை பாதித்த மக்கள் தங்கியிருந்த நலன்புரி முகாமில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 12.10 மணி யளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஒரு பிள்ளையின் தந்தையான சுந்தரம் பிள்ளையான்(வயது 26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தவர் கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்த சமயம் இந் தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

குண்டுத் தாக்குதல் குறித்து அக்கரைப்பற் றுப் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள் ளனர். (எ)

# உஸ்பெகிஸ்தானில் ஆர்ப்பாட்டம் 500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!

## ஜனாதிபதி கர்லிமோவ் தெரிவிப்பு

லண்டன்,மே16

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடான உஸ் பெகிஸ்தான் ஜனாதிபதி இஸ்லாம் கர்லிமோ வுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் நடத்திய ஆயுதத் தாக்குதலைத் தொடர்ந்து படையின ருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் ஏற் பட்ட கடும் மோதலில் சுமார் 500 பேர் உயிரி ழந்துள்ளனர். தொடர்ந்தும் கலவரம் தொடர்ந்த வண்ணம் உள்ளதென அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உஸ்பெகிஸ்தானில் இடம்பெற்ற வன்செயல் களுக்கு தனது ஆட்சியைக் கவிழ்க்க நினைக் கும் ஆயுதக் குழுக்களும், முஸ்லிம் அடிப் படைவாதிகளுமே காரணம் என அந்நாட்டு ஜனா திபதி இஸ்லாம் கர்லிமோவ் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை உஸ்பெகிஸ்தா னில் ஏற்பட்ட ஆர்ப்பாட்டங்கள், வன்முறைகளை அடுத்து முதன்முதலாக உரையாற்றியபோதே ஜனாதிபதி கர்லிமோவ் மேற்கண்டவாறு கூறி னார்.

உஸ்பெகிஸ்தானில் அண்டிஜான் நகரில் உள்ள இராணுவப்பாசறை மற்றும் சிறைச் சாலையை ஆயுதம் தாங்கிய குழுவொன்று தாக் குதல் நடத்தியதில் சுமார் 2ஆயிரம் கைதிகள் தப்பியோடியுள்ளனர்.

இராணுவப் பாசறையைத் தாக்கிய ஆயுதக் குழு அங்கிருந்த ஆயுதங்களைக் கொள்ளை யடித்துச் சிறைச்சாலையைத் தாக்கியது என் றும் -

அரச அலுவலகங்களையும் கைப்பற்றிய இந்தக் குழுவின் நோக்கம் சிறைவைக்கப்பட்டி ருந்த 23 இஸ்லாமிய தீவிரவாதிகளை விடுவிப் பதே என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறைச்சாலைத் தாக்குதலைத் தொடர்ந்து சுமார் 5ஆயிரம் பொதுமக்கள் அரசுக்கு எதி ராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு அந்நாட்டு ஜனாதிபதி இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து ஆர்ப் பாட்டக்காரர்களை கலைப்பதற்கு இராணுவத் தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்றும் -

இராணுவத்தினர் நகரம் முழுவதையும் சுற்றி வளைத்துக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த னர் எனச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட் டுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை உறுதி யாகத் தெரியவில்லை. சுமார் 30 முதல் 300வரை யானவர்கள் உயிரிழந்திருக்கலாம் என மதிப் பிடப்பட்டுள்ளது என அண்டிஜான் மத்திய மருத்துவமனை மருத்துவர் ஒருவர் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்குத் தெரிவித்தார்.

அண்டிஜான் நகரில் இன்னும் பதற்ற நிலைமை காணப்படுகிறது. படையினர் தொடர்ந் தும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக் கின்றன.

இதேவேளை, உஸ்பெகிஸ்தானின் மற்று மொரு நகரிலும் சுமார் 500 ஆர்ப்பாட்டக்காரர் கள் இணைந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள் ளனர் என செய்தியாளர்கள் தெரிவித்துள்ள னர்.

உஸ்பெகிஸ்தானின் இலியிசெவ்ஸ்க் நக ரில் ஏற்பட்ட கலவரத்தினை அடக்க முயன்ற உள்ளூர் பொலீஸ் அதிகாரியை ஆர்ப்பாட்டக் காரர்கள் பணயக் கைதியாகப் பிடித்து வைத் துள்ளனர் என்றும் -

ரஷ்ய செய்தி நிறுவனமொன்று தெரிவித்துள் ளது.

கிளர்ச்சியாளர்களை சமாதானப் பேச்சுக்கு வருமாறு அரசு கோரிக்கை விடுத்தபோதிலும் கிளர்ச்சியாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அந்நாட்டு ஜனாதிபதி இஸ்லாம் கர்லிமோவ் பதவியை ராஜினாமாச் செய்யும் வரை ஓயப்போவதில்லை என கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-க)

# இந்தியாவுடன் நெருக்கமான உறவு: அமெரிக்க ஜனாதிபதி புஷ் விருப்பம்

வாஷிங்ரன்,மே16

இந்தியாவுடன் நெருக்கமான நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ள அமெரிக்கா விரும்புகிறது.




இருநாடுகளுமே தற்போது சிறந்த நல்லுறவை நோக்கி முன்னேறுகின்றன என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி புஷ்ஷின் சார்பாக வெள்ளை மாளிகை பத்திரிகைச் செயலாளர் ஸ்கொட் மைக்லென் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ் விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த வாரத்தின் ஆரம்பத்தில் மொஸ் கோவில் ஜனாதிபதி புஷ்ஷும் இந்திய பிர தமர் மன்மோகன் சிங்கும் சந்தித்துப்பேசினர். இரண்டாம் உலகப்போரில் நாசி ஜேர்மனியை நேச நாடுகள்வெற்றி கொண் டதின் 60ஆம் ஆண்டு நிறைவு விழா மொஸ் கோவில் நடந் தது. இந்த ஆண்டு விழாவின் போது நடந்த மதிய விருந்தில் புஷ்ஷும் மன்மோகன் சிங் கும் சந்தித்துப் பேசினர்.

அமெரிக்க - இந்திய உறவுகள் சிறப்பாக முன்னேற்றம் அடைந்து வருகின்றன. இந்நிலை யில் இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற அமெரிக்க ஜனாதிபதி புஷ் விரும்புகிறார்.

இந்தியாவுடன் சிறந்த நல்லுறவுகளை ஏற் படுத்த அமெரிக்கா விரும்புவதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர்கள் கொண்டலிஸா ரைஸும் தெரிவித்துள்ளார்.

சமாதானம், பாதுகாப்பு, எரிசக்தி, வளர்ச்சி ஆகிய துறைகளில் இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா விரும்புவதாக ரைஸ் தெரிவித்தார்.



அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் அமெரிக்கா சென்றிருந்தார். இவர் ஜனாதிபதி புஷ்ஷுடன் பேச்சு நடத்தினார். இந்திய பிரதமர் மன்மோகன் சிங் வரும் நிலையில் அமெரிக்கப் பயணம் மேற்கொள்ள இருப்பது குறித்து அவர்கள் விவாதித்தனர்.

இந்திய, அமெரிக்க உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக புஷ்ஷும் நட்வர் சிங்கும் விருப்பம் தெரிவித்தனர் என அமெ ரிக்க நாடாளுமன்றத்தின் செனட் குழு ஒன் றில் ரைஸ் தெரிவித்தார் எனக் குறிப்பிடப்பட் டுள்ளது. (க-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# இடைக்கால நிர்வாகம்: மீண்டும் வற்புறுத்தல்

'மூந்தி வந்த காதை பிந்தி வந்த கொம்பு மறைத்தது' போல என்ற பேச்சு வழக்கு நம் மத்தியில் உள்ளது. அது போன்றுதான் இருக்கின்றது ஆழிப் பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்துக்காகப் புலிகளுடன் சேர்ந்து அரசு அமைக்கவுள்ளதாகப் பிரசாரப்படுத்தப்படும் பொதுக்கட்டமைப்பு விவகாரமும்.

இலங்கையில் நிலவும் இனப்பிணக்குக்கு - பூசலுக்கு - அமைதிவழியில் சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் முன்னெடுத்துச் செல்வதே நாட்டின் இன்றைய பிரதான - தலையாய - பிரச்சினையாகும்.

அந்தச் சமாதான முயற்சிகளைப் பயன்தரு விதத்தில் முன்னெடுப்பதாயின் ஏற்கனவே, பல தசாப்த காலக் கொடூர யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அவசர, அவசிய மனிதாபிமானத் தேவைகளை நிறைவுசெய்யும் நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும். கொடூர யுத்தத்தின் கொடிய விளைவுகளால் அந்தரிக்கும்- சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கும்- தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

அதற்காக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டம் ஒன்றை ஈழத்தமிழர்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள், நீண்ட - பலமட்ட -கலந்தாலோசனைகளின் பின்னர் சமர்ப்பித்து ஒன்றரை வருடங்களாகிவிட்டன.

அந்த விடயத்தில் அரசுத் தரப்பிலிருந்து எந்த முன்னேற்றகரமான பதிலும் இல்லை. அந்த உருப்படியான யோசனையைக் கிடப்பில் போட்டுவிட்டு காலத்தை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது தென்னிலங்கை அரசு.

அந்த இழுத்தடிப்புக்கு நல்லவாய்ப்பாக அரசுக்கு வந்து கிட்டியிருக்கின்றது இந்தப் பொதுக்கட்டமைப்பு விவகாரம்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தை வைத்து, அரசு எவ்வாறு அரசியல் தகிடு தத்தம் செய்கிறது என்பதைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் விலாவாரியாக அம்பலப் படுத்துகின்றார்.

"பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசு தொடர்ந்தும் காலத்தை இழுத்தடிக்கிறது. இந்த விடயம் ஒரு பெரும் அரசியல் விவகாரமாக்கப்பட்டு தென்னிலங்கையில் சிங்களக் கட்சிகளிடையே பெரும் சர்ச்சையாகவும் உருவாக்கப்பட்டிருக்கிறது. பொதுக் கட்டமைப்பு என்பது ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வு சம்பந்தமாக சில திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஓர் அமைப்பு மட்டுமே. ஆனால், அது இன்று தென்னிலங்கையில் பெரும் அரசியல் விவகாரமாகப் பெருப்பிக்கப்பட்டிருக்கின்றது.

"தமிழர்களுக்கு ஏதோ தனிநாடு வழங்குவதைப் போலவும், உரிமைகளையும் அதிகாரங்களையும் அள்ளி வழங்குகின்ற ஒரு திட்டம் போலவும் இது பிரசாரப்படுத்தப்பட்டிருக்கின்றது. பொதுக் கட்டமைப்பு விவகாரத்தில் ஏற்பட்டிருக்கும் இழுபறி மற்றும் சர்ச்சைகளைப் பார்த்தால் அது ஏதோ இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரம் போன்று அர்த்தப்படுவதாகத் தெரிகின்றது."

- இப்படிச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் தமிழ்ச் செல்வன்.

மூலப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முக்கியமான ஒன்று, காதுபோன்ற அந்த விடயத்தை கொம்பு போன்று நேற்று முளைத்த பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை முன் நிறுத்துவதன் மூலம் மூடி மறைப்பதற்கு எத்தனிக்கின்றது தென்னிலங்கைச் சிங்களம்.

உதவிவழங்கும் நாடுகளின் கண்டிக் கூட்டம் இன்று நடைபெறுகின்றது. இக்கூட்டத்திலும் நேற்று முளைத்த பொதுக்கட்டமைப்பு விவகாரம்தான் நாட்டில் உள்ள ஒரேயொரு பிரச்சினை என்று காட்டுவதற்குத் தென்னிலங்கைச் சிங்கள அரசு முயலும்.

சர்வதேசத்தையும் தவறாக வழிநடத்தும் இந்த முயற்சியை அம்பலப்படுத்துவது தமிழர் தரப்பின் கடமையாகின்றது.

அதனால்தான் - பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தன்னும் சிங்கள அரசினால் நியாயமாக நடந்து கொள்ளமுடியாது என்பதை உணர்ந்ததால்தான் - பொதுக்கட்டமைப்பு விடயத்தைத் தவிர்த்து மீண்டும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை உருவாக்கும் தங்களின் எத்தனத்தை முதன்மைப்படுத்துவதற்குப் புலிகள் முடிவு செய்திருக்கின்றார்கள்.

நல்ல தீர்மானம் இது.

ஆசிரியர் சேவை முதலாம் வகுப்பு பதவியுயர்வு:

# போட்டிப் பரீட்சை நடத்துவதற்கு எதிர்ப்பு; உயர்நீதிமன்றில் மனுச் செய்யவும் ஏற்பாடு

அச்சுவேலி, மே16

இலங்கை ஆசிரியர் சேவை முதலாம் வகுப்புப் பதவி உயர்வு வழங்கப் போட்டிப் பரீட்சை நடத்தப்படுவதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இது தொடர்பான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவை முதலாம் தரத்திற்குப் பதவி உயர்வு வழங்கும்போது விதிக்கப்பட்ட நிபந்தனைகளினால் பாதிக்கப்பட்டு முதலாம் வகுப்பு பதவி உயர்வினைப் பெறமுடியாதுபோன யாழ்.மாவட்ட ஆசிரியர்கள் குறிப்பாக இது விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளனர் எனக் கூறப்பட்டது.

உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதன் மூலம் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நியாயமான நிவாரணம் பெறுவது தொடர்பாக உயர் நீதிமன்ற சட்டத்தரணிகளுடன் ஆலோசனை நடத்தியதையடுத்து மிகவிரைவில் வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்படும் எனப் பாதிக்கப்பட்ட ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். (எ-11)

# பதவி உயர்வுக்குப் போட்டிப் பரீட்சை நடத்த தொழிற்சங்கக் கூட்டமைப்பும் பலத்த எதிர்ப்பு

இலங்கை ஆசிரியர் சேவை முதலாம் வகுப்புக்கு பதவியுயர்வு வழங்க போட்டிப் பரீட்சை நடத்தப்படுவதற்குக் கல்விச் சேவையாளர் சங்கமும்தொழிற்சங்கக் கூட்டமைப்பும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொழும்பு மகாபோதி வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமைப்பின் கூட்டத்தில் இது தொடர்பான கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், அகில இலங்கை பட்டதாரிகள் சங்கம், ஆசிரியர் ஆலோசகர் சங்கம், இலங்கை ஆசிரியர் காங்கிரஸ், இலங்கை சுதந்திர ஆசிரியர் சங்கம், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர்சங்கம் உள்ளிட்ட பன்னிரண்டு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இலங்கை ஆசிரியர் சேவை முதலாம் வகுப்புக்கு பதவி உயர்வு வழங்க போட்டிப் பரீட்சை நடத்த கல்விஅமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதற்குக் கண்டனம் தெரிவித்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் முதலாம் வகுப்பு பதவி உயர்வு தொடர்பாக அண்மைக் காலத்தில் ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்குக் கல்வி அமைச்சு வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கவேண்டும் எனக் கோரிக்கைவிடுத்தனர்.

கல்வி அமைச்சின் பதிலுக்கு கால அவகாசம் வழங்கி நாளைமறுதினம் புதன்கிழமை மீண்டும் கூடி இறுதிமுடிவு எடுப்பதாகவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கல்வி அமைச்சு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு ஏற்புடைய விதத்தில், ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினால் கல்வி அமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தல், ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக் கடமைகளைப் புறக்கணித்தல் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டி ஏற்படும் என தொழிற்சங்கத்தின் முன்னணிப் பிரமுகர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். (எ-11)

மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு நடத்திய

# நுண்ணறிவுப் பரீட்சையை ரத்துச்செய்யுமாறு பட்டதாரி பயிலுநர்களின் ஒன்றியம் கோரிக்கை

வடக்கு- கிழக்கு மாகாணப் பொதுச் சேவைஆணைக்குழுவினால்பட்டதாரிகளை ஆள்சேர்ப்பதற்காக அண்மையில் நடத்தப்பட்ட நுண்ணறிவுப் பரீட்சையை ரத்து செய்யுமாறு கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பட்டதாரி பயிலுநர்களின் ஒன்றியம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இதுவிடயமாக மேற்படி ஒன்றியம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்:-

மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுப் பட்டதாரிகளை அரச சேவைக்குள் உள்வாங்கும் நோக்குடன் நுண்ணறிவு பரீட்சையைக் கடந்த 8ஆம் திகதி நடத்தியது.

ஆனால், இந்தப் பரீட்சை வினாத்தாள் நுண்ணறிவு என்ற அடிப்படையில் அமையாது பந்தி அடிப்படையில் அமைந்து ஒரு மணிநேரத்தில் கிரகித்துச் செய்யமுடியாத அளவிற்கு அமைந்துவிட்டது.

இந்த வினாத்தாளை கணிதம், பொறியியல் படித்த ஒருவரால் மட்டுமே ஓரளவில் கிரகிக்க முடியும். ஏனையோரால் இலகுவில் கிரகித்துக் கொள்ளமுடியாத நிலையில் இந்த வினாத்தாள் அமைந்துவிட்டது.

எனவே, வடக்கு - கிழக்கிலுள்ள குறிப்பிட்ட ஆளணி வெற்றிடத்துக்கான ஆளணித் தெரிவிற்கு ஆண்டு மூப்பின் அடிப்படையில் ஏனைய தகுதிவிதிகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆள்சேர்ப்புச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-185)




இலங்கை அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் சங்கமும், யாழ். மருத்துவச் சங்கமும் இணைந்து நடத்திய மருத்துவக் கருத்தரங்கின் இறுதிநாள் அமர்வுகள் நேற்று ஜெயலஸ் மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கருத்தரங்கில் யாழ். வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் ரவிராஜ் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றுகிறார். கருத்தரங்கின் நிறைவில் தென்னிலங்கை வைத்திய நிபுணர்கள், யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி கலாநிதி சிவபாலன் மற்றிம் யாழ். வைத்திய நிபுணர்கள் குழுவினர் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுடன் இணைந்து எடுத்துக்கொண்ட படத்தையும் காணலாம். (படங்கள்:- பிரபா)

# வீதியைப் புனரமைக்குமாறு கலைமன்றம் கோரிக்கை

சாவகச்சேரி சிவன் கோயிலுக்குச் செல்லும் புகையிரத நிலைய வீதியைப் புனரமைக்குமாறு தென்மராட்சி கலைமன்றத்தினர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளரைக் கோரியுள்ளனர்.

இவ்வீதி 40 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் உள்ளதாகவும் -

யுத்த அனர்த்தங்களின்போது இவ்வீதி மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதாகவும் -

சாவகச்சேரி சிவன் கோயிலுக்கு அருகில் அமைக்கப்பட்டுவரும் பிரதேச கலாசார மண்டபத்திற்கு இவ்வீதி பிரதான பாதையாகவுள்ளதாகவும் தமது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளனர். (எ-117)

## நாளை

வைகாசி 03
செவ்வாய்க்கிழமை
17.05.2005
திதி : நவமி
பின்னிரவு 03.27 வரை
நட்சத்திரம் : மகம்
பிற்பகல் 12.11 வரை
சுபநேரம் : 10.23 - 11.53
ராகுகாலம்: 02.53 - 04.23
[illegible]

# பணம் வசூலிக்கும் நோக்கத்துடன் வலி.தென்மேற்கில் கிருமி நாசினி விசிறல்

எச்சரிக்கின்றார் விவசாயப் போதனாசிரியர்

தென்னை, மாமரம் மற்றும் எலுமிச்சை, தோடை ஆகியவற்றிக்கு கிருமிநாசினி விசிறுவதாகக் கூறிக்கொண்டு தனிப்பட்ட சிலர், வலி.தென்மேற்கு பகுதியில் கிராமங்களில் அதிக பணம் வசூலித்து வருகின்றனர்.

இவர்கள் விசிறிய -தெளித்த- மரங்களில் கிருமிகள் அழிவதற்குப் பதிலாக மரக் கன்றுகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது. இவ்வாறான ஏமாற்றுப் பேர்வழிகளிடம் சிக்கி ஏமாறாதீர்கள். இவர்கள் குறித்து விழிப்பாக இருங்கள்.

வலி.தென் மேற்கு விவசாயக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய கீரிமலை கமநல சேவைநிலையை விவசாய போதனாசிரியர் திருமதி பரமேஸ்வரி மணிவர்மன் இத்தகவலை வெளியிட்டார்.

பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் கடந்த வியாழக் கிழமை சண்டிலிப்பாயிலுள்ள வலி.தென் மேற்கு பிரதேச செயலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் சிலர் தமது பகுதிகளில் தனிப்பட்ட சிலர் வீடுகளுக்கு வந்து பழமரக்கன்றுகளுக்கு கிருமி நாசினி விசிறுவதாகக்கூறி அதிக பணம் பெற்றுக்கொண்டு கிருமிநாசினி விசிறியதாகவும் - இதனால், கிருமிகள் அழிவதற்குப் பதிலாக மரங்களின் பிஞ்சுகள் கருகி அழிந்துள்ளதாகவும் கவலை தெரிவித்தனர்.

கடந்தவாரம் நவாலிப் பகுதியிலும், சுதுமலை பகுதியிலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றதாகவும் சுட்டிக்காட்டினர்.

இதனை அடுத்து உரையாற்றிய விவசாய போதனாசிரியர்:-

தனிப்பட்டமுறையில் இவ்வாறு கிருமி நாசினி விசிற வருவோரிடம் சிக்கி மக்கள் ஏமாற்றமடையக்கூடாது.

மாகியப்பிட்டியிலுள்ள கீரிமலை கமநல சேவை நிலையத்தில் மாமரங்களுக்கு மாவிலைத் தத்தி பூச்சிகளை அழிப்பதற்கு இரசாயன மருந்தை விசிறும் தெளிகருவி உள்ளது. இதனைப் பிரதேச மக்கள் இரவலாகப் பெற்று இரசாயன மருந்தை விசிற முடியும் - என்றார்.

மரங்களுக்கு கிருமி நாசினி மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் தெளிக்கும் முறை பற்றியும் அவற்றின் அளவுகள் பற்றியும் அங்கு நேரில் அறிந்து கொள்ளமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-135)

## உதயவாக்கு

உலகின் சிறப்புகள் அனைத்திலும் உயர்ந்தது அசைவற்ற அமைதியான பண்பொன்று. வில்லியம் ஷேக்ஸ்பியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள SUZUKI-GS 125 மோட்டார் சைக்கிள் சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 234, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (சி-42839)

அரச உத்தியோகத்தரின் தனிப்பட்ட பாவனையில் உள்ள Yamaha mate 50 YCLS மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 299993. (454098)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, கற்குழி லேனில் 9பரப்பு 13 குளி காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 011 - 2341197 (8.30a.m. 5.00p.m.), 011 - 2933348 (இரவு 7.30 பின்). (45395)

## காணி தேவை

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் (கோயில் வீதி, செட்டித்தெரு, வைமன் வீதி விரும்பத்தக்கது): ஒரு பரப்பு - ஒன்றரைப் பரப்புக் காணி விலைககுத் தேவை. தொடர்பு: 0777 - 555061, 071 4078976. (45396)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, 49/5, அச்சுக்கூட ஒழுங்கையில் 3¾ பரப்பு உள்ள காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 2638. (45292)

கோப்பாய் வெள்ளருவைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 2½ பரப்பு காணியுடன் சேர்ந்த புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 021 - 222 2638. (45293)

## வீடு வாடகைக்கு

கச்சேரிக்குச் சமீபமாக நாவலர் வீதியில் 2000 சதுர அடிக்கு மேற்பட்ட விஸ்தீரணமுடைய வீடு சகல வசதியுடன் வாடகைக்குண்டு (NGO விரும்பத்தக்கது) தொடர்பு: T.P.: 0776 510537 (45377)

## தவறிவிட்டது

உடுவில் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த துரைராஜா ராஜ் கண்ணா என்பவருடைய தேசிய அ.அ.(இல. 832073954V) 14-05-2005 சனிக்கிழமை உடுவிலுககும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் கே.கே. எஸ்.வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது பியூட்டி சில்க், 69, நவீன சந்தை, யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளவும். T.P.: 222 7359. (45416)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யா திருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம விரும்பி ஏற்கும் ஆண்கள் எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. புகைப்படம், ஜாதகத்துடன் நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமணமாலை, இல.289A, பட்டாணிச் சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207. (45057)

## பணிப்பெண் தேவை

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் வயோதிபத் தம்பதிகளுக்கு வீட்டில் தங்கியிருந்து சைவஉணவு தயாரித்து வழங்கப் பணிப்பெண் தேவை. அ.முத்துலிங்கம், 109, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.222 3130. (45391)

## கோழிக்குஞ்சு விநியோகம்

அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் 16.05.2005 மாலை விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, றஞ்சித் - 517, ஸ்ரான்லி றோட், தாரகை - முதலாம் கட்டை பருத்தித்துறை, ஸ்ரீராம் - பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக. P.ரவி - சாவகச்சேரி, ராதா - மாவடி வடடுக கோட்டை, கௌரி ஸ்ரோர்ஸ் - பிரதான வீதி, பண்டத்தரிப்பு. T.P.: 222 3529, 2222867.(45367)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

நல்லூர், மருதடி வீதியில் நல்ல சூழலில் (65/4ஆம் இலக்கம்) சுற்று மதிலுடன் கிணற்றுடனும் கூடிய 2½ பரப்பில் அமைந்துள்ள வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: சிவ.ஆறுமுகசாமி J.P. இல. 42, கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். தொலைபேசி: 0777 299272. (45406)

## மானிப்பாய் பாடசாலையில் இரு மாடிக்கட்டம்

மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையில் "நிகொட்" திட்டத்தின்கீழ் இரு மாடிக் கட்டடம் விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

அதிபர் அலுவலகம், நூல் நிலையம் மற்றும் பத்து வகுப்பறைகளைக் கொண்டதாக இநத மாடிக்கட்டடம் அமையவிருப்பதாக வித்தியாசாலையின் அதிபர் தி.அருட்பிரகாசபிள்ளை இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)

## காணி கொள்வனவுக்கு நிதி நன்கொடை

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்திற்கான காணி கொள்வனவு செய்யும் நிதிக்கு ஐயாயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்குவது என்று பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணயச் சங்கம் தீர்மானித்துள்ளது.

மேற்படி மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விடுத்த வேண்டுகோளையடுத்து இந்த நன்கொடை வழங்கப்படவுள்ளதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

## நெல்லியடி ம.வியில் மீண்டும் மாணவர் விடுதி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் மீண்டும் மாணவர் விடுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாகச் செயலிழந்த மேற்படி மாணவர் விடுதி கடந்த வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.35 லட்சம் ரூபா செலவில் தளபாட வசதிகளுடன் மாணவர் விடுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதிபர் எஸ்.சேதுராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அருளானந்தம் மங்கள விளக்கேற்றி மாணவ விடுதியை ஆரம்பித்து வைத்தார். (எ-70)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்.போன்சொப்**
10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, (திறீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

---

# கண்ணீர் அஞ்சலி

எமது இலங்கை செஞ்சிலுவைச் சங்க
யாழ். கிளையின் நிர்வாக உறுப்பினர்
பேராசிரியர் கா.குகபாலன்
அவர்களின் அன்பு மகள்
திருமதி **திருமகள் கார்த்திகேயன்**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிததுக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்.
73. கண்டி வீதி. யாழ்ப்பாணம்.
(சி-42836)(26-14-16)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை
ஆளுநர் சபை, அங்கத்தவர்கள்,
ஊழியர்கள், தொண்டர்கள்.

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்றுறைத் தலைவர்
பேராசிரியர் கா.குகபாலன் அவர்களின் பாசமிகு மகள்
திருமதி **கார்த்திகேயன் திருமகள்**

அவர்கள் (13-05-2005) வெள்ளிக்கிழமை திடீர் மரணமடைந்த செய்தி அறிந்து நாம் அதிர்ச்சியடைவதோடு, ஆழ்ந்த வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

புவியியற்றுறையினர்,
**யாழ்.பல்கலைக்கழகம்.**
(45387)(26-14-16)

---

# கண்ணீர்க் காணிக்கை



எம் ஆருயிர் நண்பன் க.தனேசனின்
அன்புத் தந்தை
**சதாசிவம் கனேஸ்வரன்**

அவர்களுடைய திடீர் மறைவினால் நாம் அதிர்ச்சியும் துயரமும் அடைவதோடு, அன்னாரின் பிரிவினால் ஆற்றொணாத் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

**யாழ்.இந்து நண்பர்கள்.**
**(2006 உயர்தரம்).**
(45410)(26-14-16)

---


வாழக்கையாளர்களே...
பாஸ்போட், அடையாள அட்டை படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்து பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.
மூர்த்தி ஸ்ரூடியோ அன் டிஜிரல் கலர் லாப்
யாழ்ப்பாணம். 0714168475
யாழ். வீதி. மானிப்பாய். T.P: 021-222 2884
E.mail: moorthylazer@yahoo.com


# இலவச அறிமுக உரை

**வாழும் கலை பயிற்சி - பாகம் I**

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜியின் ஜெயந்தி விழாவை முன்னிட்டு சர்வதேச வாழும்கலை அறநிறுவனம் நடத்தும்

**இடம்:** இந்துசமயப்பேரவை, பலாலி வீதி, கந்தர்மடம், தொ.பேசி இல:222 6048
**நாள்:** 15.05.2005 ஞாயிறு மாலை 6 மணி அல்லது 16.05.2005 திங்கள் மாலை 6 மணிக்கு...(புதியநேரம்)
**பயிற்சி நாள்கள்:** 17.05.2005 செவ்வாய் முதல் 22.05.2005 ஞாயிறு வரை
(45184)

**அனைவரும் வருக!**

# இலவச இளைஞர்களுக்கான பயிற்சி

சர்வதேச வாழும் கலை அறநிறுவனம், இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் அளிக்கிறது. 18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் 18. 05. 2005 ஆம் திகதி முதல் 24. 05. 2005 வரை... 7 நாள்களுக்கு 7.30 மணிமுதல் மாலை 6 மணிவரை ... இலவச உணவுடன் குறைந்த இடமே உள்ளதால் இலவச அனுமதிச் சிட்டுப்பெற்றுக்கொள்ள உடன் கீழ்க்கண்ட இடங்களில் தொடர்புகொள்ளவும்.

பதிவு செய்யும் நேரமும் இடமும்
காலை 10 மணிமுதல் மாலை 4 மணிவரை

நாவலர் ... யாழ்ப்பாணம் ☎ 222 3893

இந்து சமயப்பேரவை, பலாலி வீதி, கந்தர்மடம், தொ. பே. இல. 222 6048

இந்த அரிய ... தவறவிடாதீர்கள்

---

# விற்பனையாகின்றது!

**இமயம்**

மாணவர்கள் படிப்பதற்கும்
நடிப்பதற்கும் பொருத்தமான
நவீன நாடகங்கள்கொண்ட ஒரே ஒரு நூல்



400 நாடகங்கள் படைத்த
கலாபூஷணம்
அராலியூர் *ந. சுந்தரம்பிள்ளை* எழுதியது.
ரூபா. 150/=
(45383)(26-14-45)

---

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு

# ஒரு மகிழ்ச்சி தரும் செய்தி!

**சிவகுரு வாணிபத்தின் கவர்ச்சிகரமான விலைகளில், பலவர்ணங்களில் இன்றே நாடுங்கள்!**

பரந்தன் **TVS** நிறுவனத்தின் ஏகமுகவர்களான சிவகுரு வாணிபத்திடம்

**GLX– 1,18000/= தொடக்கம்**
**ஸ்கூட்டிப் பெப் – 81900/=**




தொடர்பு: **சிவகுரு வாணிபம்**
**A-9 வீதி, பரந்தன். T.P.: 021 228 5072**
(C-42800)(53)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பதஞ்சலி சிவபாக்கியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

இணுவில் மேற்கைச் சேர்ந்தவரும் இணுவில் மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியையுமாகிய திருமதி பதஞ்சலி சிவபாக்கியம் அவர்கள் 15-05-2005 ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியர் அமரர் நா.கமுத்து பதஞ்சலியின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விரவம் பின்னர் அறியத் தரப்படும்.

K.K.S. வீதி,
இணுவில்.
(45415)(26-14-16)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி செல்வராசா சரஸ்வதி



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் நந்தாவில், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா சரஸ்வதி அவர்கள் 11-05-2005 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - நாகம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - சிவக்கொழுந்துவின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வராசா (சின்னண்ணை) அவர்களின் பாசமிகு மனைவியும் கமலாதேவி (மலேசியா), இராமச்சந்திரன் (கனடா), இராமகிருஷ்ணன் (மலேசியா), மகேஸ்வரி (சிங்கப்பூர்), மகாதேவா (சிங்கப்பூர்), சகுந்தலா (மாவிட்டபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வகுமாரி (லண்டன்), ஜெயகுமாரி, விஜயகுமாரி (லண்டன்), சிவகுமார் (ஜேர்மனி), உதயகுமாரி, இரத்தினகுமார் (பிரான்ஸ்), றாஜி (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாரும் யோகேந்திரநாதன் (லண்டன்), சிவலிங்கம், ஜெயக்குமார் (லண்டன்), கோபாலகிருஷ்ணன் (சாயி ஸ்ரோர்ஸ், கொக்குவில்), வத்சலா (பிரான்ஸ்), கேசவன் (KEST CABS, Colombo) ஆகியோரின் அன்பு மாமியாரும் வான்மதி, ஐங்கரன், அஜந்தன் (லண்டன்), சிவாஜினி (நான்காம் வருட முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), சிந்துஜா, அரவிந்தன், சங்கீதா (லண்டன்), தக்ஷாயினி, பிரவீன்ராஜ் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), சகானா, அடானா (பிரான்ஸ்), தூயோன், சேயோன் (கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-05-2005) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில்.
(45392)(26)

தகவல்:
குடும்பத்தினர்.

# அழகியல் கலைகளின் வளர்ச்சி ஆழ்மனச் சிக்கல்களை தீர்க்கும்

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு



கிளிநொச்சி,மே16

மனித மனங்களின் காயங்களை, ஆழ்மனச் சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல் அழகியல் கலைகளுக்கே உண்டு. யுத்தத்தாலும் ஆழிப்பேரழிவாலும் பாதிக்கப்பட்ட எமது சமூகத்திறகு அழகியல் கலைகளே அருமருந்தாக அமையும்.

- இவ்வாறு கூறினார் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ்.இராசநாயகம்.

கிளிநொச்சி மாவட்ட அழகியல் கலாமன்றத்தின் பளைப் பிரதேசத்துக்கான அழகியற் கற்கை நிலையத்தைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ், ஹிந்தி, தெலுங்கு என எல்லா மொழிகளுக்குமுரிய கலைகளின் பல்வேறு அம்சங்களை உள்வாங்கித் தமக்கென ஒரு தனித்துவத்துவமான கலை வடிவத்தைச் சிங்கள தேசியம் பெற்றுவிட்டது. ஆனால், அறுபத்து நான்கு கலைகளைக் கொண்டதாகக் குறிப்பிடப்படும் தமிழ்ப்பண்பாட்டில் தமிழ்த்தேசியததை அடையாளப்படுத்தும் தனித்துவம் மிகு கலை வடிவங்கள் இன்னும் உருவாகவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு அழகியல் செயற்பாடுகள் மீது அதிககவனம் செலுத்தப்படவேண்டும் - என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

பளைப் பிரதேசக் கோட்டக்கல்வி அலுவலர் எஸ்.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட அழகியல் கலாமன்றத் தலைவர் அன்ரன்அன்பழகன் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினைப் பளைப்பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றிவைத்தார். அழகியல் கலாமன்றக் கொடியினை அதிபர் விஜயசேகரம் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து பளைப் பிரதேச அழகியல் கலாமன்றம் அரச அதிபரினால் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பளைப் பிரதேச செயலர் எஸ். சிவசிறி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். பெயர்ப்பலகையினை கிளிநொச்சி மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ் திரைநீக்கம் செய்துவைத்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், பலம் மிக்க தமிழ்த்தேசிய கலாசாரக் கட்டமைப்பு ஒன்று உருவாக்குவதற்குரிய களமாக இந்த அழகியல் கலாமன்றம் வளர்ச்சியடைய வேண்டும். இப்பிரதேசத்தில் காணப்படும் அழகியல் பாடத்திற்குரிய ஆசிரியர்களின் பற்றாக் குறையைத் தீர்ப்பதற்குரிய நிலையமாகவும் இந்நிறுவனம் அமையவேண்டும் - என்றார்.

சங்கீதம், நடனம், மிருதங்கம் ஆகிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் விரைவில் சித்திரம், ஓகன், நாடகம் என்பவற்றிற்கான வகுப்புகளும் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. பளைப் பகுதிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளுடன் அழகியல் கலாமன்றத்தின் இசைத்தென்றல் மெல்லிசை நிகழ்வும் சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெற்றன. (எ)

## ஜி.சீ.ஈ. உயர்தரக் கல்வியைத் தொடர பொருத்தமான ஆசிரிய ஆளணி இல்லை

### வன்னி நிலைமை குறித்து 10 'ஏ' பெற்ற மாணவன்



**சிவபாதம் பிரசாத்**
**முள்ளியவளை**
**வித்தியானந்தாக் கல்லூரி**

கல்வி, கற்பதற்கான போதிய வசதியற்ற இடத்தில்தான் நாங்கள் வாழ்கின்றோம். அந்த நிலையிலும், எனது இந்த வெற்றிக்கு முக்கியமான காரணமாக இருந்தவர்கள் எனது பெற்றோர்களே.

கல்வி வாழ்வின் ஆரம்பத்தில் இருந்தே எனது பெற்றோர்கள் எனக்கு உறுதுணையாக இருந்துள்ளனர். கல்வி மட்டுமல்ல ஏனைய விடயங்களிலும் எனது பெற்றோரே எனக்கு உதவியாக இருந்து ஊக்கமளிப்பர்.

எனது சிந்தனை, செயல் எல்லாவற்றையும் கல்வி மீது செலுத்தவைத்து அளவு கடந்த ஆசையினை கல்வியில் செலுத்தவைத்தவர்களும் அவர்களே. இதனால்தான் நான் இன்று பத்துப் பாடங்களிலும் 'ஏ' சித்தியைப் பெறமுடிந்தது.

என்னுடன் கல்வி கற்ற சகமாணவர்களும் எனது கல்வி வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். அத்துடன், எனது பாடசாலை ஆசிரியர்களான திருமதி தாமரை சுந்தரேசன், சங்கீத ஆசிரியை திருமதி திலகவதி அருளானந்தம் ஆகியோரும் எனக்கு தம்மால் இயன்ற வகையில் ஊக்கமளித்தனர். இவர்களைத்தவிர நான் வணங்கும் கடவுளும் எனக்கு உதவி புரிந்துள்ளார்.

ஒருவகையாக நான் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் வெற்றிகண்டுவிட்டேன். ஆனால், ஜி.சீ.ஈ உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்கான அடிப்படை வசதிகள் இங்கு இல்லை. இது எனக்கு மிகுந்த மனவேதனையைத் தருகின்றது.

தற்போது ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்கள், பொருத்தமான ஆசிரியர்கள் இன்றி சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே, கல்வி தொடர்பான அதிகாரிகள் இந்த விடயங்களில் உரிய நடவடிக்கைகள் எடுத்து எமது பிரதேசம் கல்வியில் முன்னேற ஆவன செய்ய வேண்டுமென்பதே எனது ஆதங்கம்.

*செவ்வி: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்*

## முல்லை ம.வியின் மைதானத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

ஆழிப்பேரலை காரணமாக சேதமடைந்த முல்லைத்தீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தைப் புனரமைத்துத் தருமாறு பாடசாலைச் சமூகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது விடயமாக பாடசாலைச் சமூகத்தினர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

ஆழிப்பேரலையால் விளையாட்டு மைதானம் முற்றாக அழிந்துவிட்டது. இதனைப் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் முன்னர் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டன. எனினும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

உடல், உள ரீதியாகப் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மேற்படி மகாவித்தியாலய மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சிக்காக 3 கிலோமீற்றர் தூரமுள்ள உடுப்புக்குளம் பொது மைதானத்துக்குச் செல்லவேண்டியுள்ளது.

எனவே, மாணவர்களது சிரமங்களை நிவர்த்து செய்யும் வகையில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (எ-416-204)

### நெற்பயிர்களில் 'சந்து குத்தி' நோயின் தாக்கம்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையில் 'சந்து குத்தி' நோயின் தாக்கம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், பயிர்கள் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளன என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (எ-341-204)

### ஆற்றுப்படுத்தலுக்காக செம்மலை மாணவர் கல்விச்சுற்றுலா

அளம்பில்,மே16

ஆழிப்பேரலையால் பாதிப்புக்குள்ளான செம்மலை மகாவித்தியாலய மாணவர்கள், ஆற்றுப்படுத்தலுடன் கூடிய கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு திரும்பியுள்ளனர்.

'சீற்' நிறுவனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. இந்த மாணவர்கள் தென்னிலங்கையின் புகழ்பெற்ற இடங்களைப் பார்வையிட்டுத் திரும்பியுள்ளனர்.

இச் சுற்றுலா தொடர்பாக பாடசாலை அதிபர் எம்.ராஜ்குமார் கருத்துத் தெரிவித்தபோது-

மேற்படி சுற்றுலா, மாணவர்களுக்கு கல்விச் செயற்பாட்டுக்குப் பேருதவியாக அமைந்தது.

அத்துடன் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டிருந்த உள்ளங்களை ஆற்றுப்படுத்தும் செயற்றிட்டமாக இது அமைந்தது-என்றார். (எ-416-204)

### செம்மலையில் நாளை நடமாடும் சேவை

அளம்பில் மே.16

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள காணிப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக காணிச் செயலணியினால் நடமாடும் சேவை நடத்தப்பட்டுவருகிறது.

செம்மலைப் பிரதேசத்துக்கான நடமாடும் சேவை நாளை செவ்வாய்க்கிழமை செம்மலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உதவிக் காணி ஆணையாளர் தலைமையில் நடைபெறவுள்ள இந்தச் சேவையில் காணி தொடர்பாகத் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் முக்கியமாக இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-416-204)




## முல்லைத்தீவில் புதுவகைக் காய்ச்சல்

ஒட்டுசுட்டான் மே.16

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் தற்போது புதுவகைக் காய்ச்சல் பரவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை -

இவ்வாறு பரவிவரும் காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கையும் வைத்தியசாலைகளில் அதிகரித்துள்ளது.

சிறுவர்முதல் பெரியவர்கள்வரை இந்த புதுவகைக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் தற்போது பரவிவரும் காய்ச்சல் - வைரஸ் தொற்றாக இருக்கலாம் என்றும் -

எனவே பொதுமக்கள் இதுவிடயத்தில் விழிப்பாகச் செயற்படவேண்டும் என்றும் - சுகாதாரப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-341-204)

## சந்திவெளிச் சம்பவத்தைக் கண்டித்து ஒட்டுசுட்டானிலும் பேரணி நடந்தது

ஒட்டுசுட்டான் மே. 16

மட்டக்களப்பு - சந்திவெளியில் பொது மக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கண்டனப் பேரணி நடைபெற்றது.

கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற இப் பேரணியில், பெருமளவான மக்கள் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலத்திலிருந்து இந்தப் பேரணி ஆரம்பமாகி ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது.

தொடர்ந்து ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய முதல்வர் பங்கயற்செல்வன் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

இதில், கிராமசேவையாளர் தெய்வேந்திரம், முத்தையன்கட்டு ப.நோ.கூ.சங்க கொள்வனவு உத்தியோகத்தர் கனகசபாபதி, பிரதேச செயலக உத்தியோகத்தர் திருமதி தியாகராசா ஆகியோர் உரை நிகழ்த்தினர். (எ-341-204)

## ஜி.சீ.ஈ. உயர்தர மாணவருக்கு உயிரியல் பாட செயலமர்வு

கிளிநொச்சி மே.16

இந்த வருடம் பரீட்சையில் உயிரியல் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களிற்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான துரித மீட்டல் செயலமர்வுகள் இன்று திங்கட்கிழமை முதல் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தமிழீழ கல்விக்கழகத்தின் ஏற்பாட்டில், கொழும்பிலிருந்து வருகைதந்துள்ள வள ஆளணியினர் இச் செயலமர்வை நடத்தவுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு செயலமர்வு நடைபெறும்.

இந்தச் செயலமர்வுகள் நாளை தொடக்கம் 20 ஆம் திகதிவரை தினமும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

செயலமர்வில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பாடசாலைச் சீருடை அணிந்து வர வேண்டும் என்றும் -

தூர இடங்களிலிருந்து வருகைதருபவர்களுக்கான தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.


இதற்கான எற்பாடுகளை கல்வி மேம்பாட்டுப் பேரவையினரும், மாணவர் அமைப்பினரும் செய்துள்ளனர். (எ-204)

### வீடுகள் கையளிப்பு

கிளிநொச்சி,மே16

மாங்குளம் - துணுக்காய் வீதியில் அமைக்கப்பட்ட செல்வராணி குடியிருப்புத் திட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் குடியிருப்புத் திட்டம் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதியுதவியுடன் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-204)



**கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள நாகேந்திரபுரம் கிராமத்துக்கு அண்மையில் உலக வங்கிப் பிரதிநிதிகள் விஜயம் செய்தனர்.**

**அங்கு நடைபெற்ற நிகழ்வொன்றில் உலக வங்கிப் பிரதிநிதி சூரியநாராயணன் மங்கள விளக்கேற்றுவதையும் - இப்பிரதேச உலக வங்கிப் பிரதிநிதிகள் பொதுநோக்கு மண்டபத்தில் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.**

**(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாதுகாப்பான வாழ்க்கையை இணைந்து, அனுபவியுங்கள்.

கணவன், மனைவி ஆகிய இருவருக்குமே நிதிப் பாதுகாப்பையும் ஏனைய அனுகூலங்களையும் வழங்கும் கூட்டு வாழ்க்கைத் திட்டத்தை அறிமுகம் செய்கிறோம்.

## ஆராதனா

கூட்டு வாழ்க்கைத் திட்டம்

வாழ்நாள் முழுவதும் இணைந்து மகிழ்வோம்.

ஈருடல் ஓருயிராய் வாழும் உங்களை LICL மனமார வாழ்த்துகிறது. ஒருவரை ஒருவர் ஆராதித்து வாழும் உங்கள் வாழ்க்கையை மேலும் சிறப்பிக்க எங்கள் "ஆராதனா" திட்டத்தில் சேமிக்க உங்களை அழைக்கின்றோம். வாழ்க்கையின் மேடு பள்ளங்களில் உறுதுணையாக நிற்பது ஆயுள் காப்புறுதி. அதிலும் கணவன் மனைவி இருவரும் கூட்டாகக் காப்புறுதி செய்வது என்பது அதிஉத்தமம். வாழ்நாளில் நீங்கள் கொண்டிருக்கும் கனவுகளை நனவாக்க உத்தரவாதமான ஒரு திட்டம்தான் "ஆராதனா".

அமைதி நிறைந்த உலகிலே - ஆதரவு மிகுந்த உலகிலே - கைகோத்து முன்னே செல்ல... ஆராதனா

காக்கும் கரங்கள்

**ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை**

இணையதளம்: www.liclanka.com

ஷார்னெல் பில்டிங் ... தொலைபேசி: 011-5334353.

24 மணித்தியால சேவை: 011-5338866, 011-4522668


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு உதவும் நாடுகளின் மாநாடு இன்று கண்டியில்

# தமிழ்மக்கள் மீதான யுத்தமுனைப்புக்கு வெளிநாட்டு நிதி பயன்படுத்தப்படலாம்

## கவனத்தில் கொள்ளுமாறு பொதுஅமைப்புகள் மகஜர்

யாழ்ப்பாணம்,மே16

சர்வதேச சமூகம் வழங்கும் நிதி தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமுனைப்புக்குப் பயன்படுத்தப்படலாம் என அச்சம் எழுந்துள்ளது. இதைக் கவனத்தில் எடுத்து நிதியுதவிகளை வழங்க வேண்டும்.

இப்படியான கோரிக்கையைச் சர்வதேச சமூகத்திடம் பொது அமைப்புகள் பலவும் விடுத்துள்ளன.

கண்டியில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்னோடியாக பல்வேறு அமைப்புகள், அந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் நாடுகளுக்கு மகஜர்களை அனுப்பியுள்ளன.

அந்த மகஜர்களின் சாராம்சம் வருமாறு:-

### யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம்

இலங்கைத்தீவின் சமாதானம், அரசியல், சமூகம், பொருளாதாரம், சுபீட்சம் என்ற வகையில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பகுதியின் தற்போதைய யதார்த்த நிலை மற்றும் சூழ்நிலைகள் குறித்து தங்களுக்கும் இதர சர்வதேச சமூகங்களுக்கும் இக்கடிதமூலம் தெரிவிக்க விரும்புகிறோம்.

தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்ட கொடிய போருக்கு, முடிவுகட்டி இயல்பு நிலையைத் தோற்றுவிக்கவும் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த வீடுகளுக்கு மீளக் குடியேறவும் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டி எழுப்பும் சமாதான நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

கடந்த மூன்று வருடங்களில் இடம்பெற்ற பல்வேறு இராணுவச் சீண்டுதல்களுக்கு மத்தியிலும் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் தாக்குப்பிடித்தது என்றால் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுமைதான் காரணம் என்பதை இன்று சர்வதேசம் உணர்ந்து நிற்கின்றது.

இவை எமக்கு ஆறுதல் அளிப்பதாகவுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் நோக்கும் இலக்கும் சிறிலங்கா அரசினால் வாக்களித்தபடி நிறைவேற்றப்படவில்லை. இது எமக்கு விரத்தியும் ஏமாற்றமும் அளிக்கிறது.

போரினாலும் பொருண்மியத் தடைகளினாலும் பாதிக்கப்பட்ட தமிழர் தயாகப் பிரதேசங்களான வடக்கு - கிழக்குப் பகுதிகளை அபிவிருத்திசெய்ய சர்வதேசத்தினால் வழங்கப்பட்ட நிதி மற்றும் மனிதாபிமான உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையவில்லை.

மாறாகத் தென்பகுதியின் அபிவிருத்திக்காகவே பயன்பட்டுள்ளது. இதற்கு 'சிரான்' என்ற அமைப்பு நல்ல முன் உதாரணமாக அமைகிறது. இதன் காரணத்தினாலேயே இடைக்காலத் தன்னாட்சி சபை உருவாக்கம் பற்றிய முன்மொழிவு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் முன்வைக்கப்பட்டது. அதுவும் அரசியல் இழுத்தடிக்கப்பட்டும் தாமதமாக்கப்பட்டும் வருகின்றன.

சர்வதேச சமூகத்தின் இடையறாத முயற்சியால் கடந்த மூன்றாண்டு காலமாக நிலவி வரும் சமாதானச் சூழலைக் கெடுக்க முயலும் சந்திரிகா அரசின் இராணுவவாத நிலைப்பாட்டிற்குச் சர்வதேச சமூகம் இடங்கொடுக்கக் கூடாது.

அதேவேளை, பொருளாதார இராஜதந்திர அழுத்தங்களை சிறிலங்கா அரசின் மீது மேலும் இறுக்கி அதைச் சமாதான முயற்சிகளின் பக்கம் திருப்பிவிட முயல்வது தங்களதும் சர்வதேச சமூகத்தினதும் தார்மீகக் கடமையாகும்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண்பதற்கு ஏதுவாக ஆக்கபூர்வமானதோர் இடைக்கால ஏற்பாட்டை புலிகள் இயக்கம் அரசுக்கு வழங்கியுள்ளது.

இதை இரு தரப்பும் முன்னெடுப்பதன் மூலம் சமாதானப் பேச்சுக்கள் தொடரவும் தமிழ், சிங்கள மக்களின் சுபீட்சமான எதிர்காலம் சிறக்கவும் பங்காற்றமுடியும்.

தற்போது நிகழுகின்ற சமாதானத்திற்கான இந்த வரலாற்று வாய்ப்பை சிறிலங்கா அரசு பயன்படுத்திக் கொள்ள சர்வதேச சமூகம் உதவவேண்டும், அழுத்தங்கள் கொடுக்கவேண்டும் என்பதே சமாதானத்தை நேசிக்கும் மக்களின் எதிர்பார்ப்பாகும். இதனை நிறைவேற்றி வையுங்கள்.

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

இருபது வருடங்களுக்கு மேலாக இலங்கைத் தமிழரின் உரிமைப்போராட்டம் நடைபெற்று வருவது உலகறிந்த விடயம். இதன் நியாயப்பாட்டை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டதுடன் சிறிலங்கா அரசும் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்த உடன்படிக்கை செய்து ஒரு யுத்தமற்ற சூழல் ஏற்படுத்தப்பட்டது.

போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி இன்றுவரை சிறிலங்கா அரசினால் எந்தவோர் ஆக்கபூர்வமான தீர்வும் எட்டப்படாமல் கால இழுத்தடிப்பு மட்டுமே நடைபெற்றுள்ளது. தமிழ் மக்கள் மீது தொடர்ந்தும் இராணுவ அச்சுறுத்தல்களும் 'உயர்பாதுகாப்பு வலயம்' என்ற பெயரில் வாழ்விடங்கள் மக்களுக்கு ஒப்படைக்கப்படாத நிலையிலும், தமிழ்மக்களுக்கு இயல்பு வாழ்க்கை ஏற்படாத நிலையில் அதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தும் மக்களின் போரட்டங்கள் இன்னமும் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றன.

வடக்கு - கிழக்கு இணைந்த தன்னாட்சி அதிகாரத்தினுடனான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும் என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்மொழிவு புறந்தள்ளப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்த பொதுக்கட்டமைப்பு முன்மொழிவு இழுத்தடிக்கப்பட்டு சிறிலங்கா அரசியலின் வஞ்சகச் செயற்பாடுகளுக்கு களமாகி தமிழ் மக்களது நம்பிக்கையை இழந்துவிட்டது.

தற்பொழுது பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சர்வதேச சமூகத்தைத் திசை திருப்ப சிறிலங்கா அரசும் ஜனாதிபதி சந்திரிகா அவர்களும் பொதுக்கட்டமைப்பு என்ற எதுவுமே இல்லாத ஒரு விடயத்தைப் பெரிதாக்கி தனது அரசியலில் லாபம்தேட எத்தனிக்கிறார். உலக நாடுகளின் உதவியைப்பெற்று சிறிலங்கா பேரினவாத அரசைப் பலப்படுத்திக் கொள்ள சந்திரிகா அரசிற்கு பொதுக் கட்டமைப்பு இன்றியமையாததாகவுள்ளது.

சிறிலங்கா அரசின் யதார்த்த நிலையைக் கருத்திற்கொண்டு காலங்காலமாக உலகநாடுகளை ஏமாற்றிவரும் சிறிலங்கா அரசு இம்முறையும் தனது கபடநாடகத்தை ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் உதவிவழங்கும் நாடுகளின் நல்லெண்ணத்துடனான முன் முயற்சியின் பிரதிபலிப்பான கண்டி மாநாடு சிறிலங்கா அரசின் போர் முன்னெடுப்புக்கு துணைபோய்விடலாம் என்ற அச்சமும் தமிழ்மக்களுக்கு எழுந்துள்ளது. ஆகையினால், மாநாட்டைக் கூட்டுவதற்கான தேவையும் இல்லை என்றே கருதுகிறோம்.

### யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

கடந்த மூன்று வருட காலப்பகுதியில் இடம்பெற்ற பல்வேறு இராணுவச் சீண்டுதலுக்கு மத்தியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் தாக்குப்பிடிப்பது எமக்கு ஆறுதல் அளிப்பதாகவுள்ள அதேவேளை, இந்த ஒப்பந்தத்தின் இலக்கு, நோக்கம் சிறிங்கா அரசினால் நிறைவேற்றப்படாதது எமக்கு ஏமாற்றத்தை அளிப்பதாகவுள்ளது.

போருக்கு ஓய்வுகொடுத்து அரசியல் தீர்வுக்கான கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பேரினவாத அரசுகள் தமிழ் மக்களை ஏமாற்றி மீண்டும் மீண்டும் போரை தமிழ் மக்கள் மீது திணித்த வரலாறு நாங்கள் அறிந்ததே. ஆயினும், தனது இராணுவக் கொள்கைகளை வெளிநாட்டின் உதவியில்லாது முன்னெடுக்கமுடியாது என்பதை நன்கறிந்த அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானத்திற்கு முட்டுக்கட்டை போடுவதாகக் குற்றஞ்சாட்டி, சர்வதேச சமூகத்தை ஏமாற்றி வருகின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளைச் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் முன்னெடுத்துச் செல்வதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்மொழியப்பட்ட இடைக்கால நிர்வாக சபையை வழங்காமல் இலங்கை அரசு இழுத்தடிப்புச் செய்து வருவது தாங்கள் அறிந்ததே. இதனால் சர்வதேச சமூகத்தினால் வழங்கப்படும் உதவிகள் கையாளப்படுவதில் வெளிப்படைத்தன்மை முழுமையாக இல்லை என்பதை மிக்க கவலையுடன் குறிப்பிட விரும்புகின்றோம்.

சர்வதேச சமூகத்தின் இடையறாத முயற்சியினால் கடந்த மூன்றாண்டு காலமாக நிலவி வரும் சமாதானச் சூழலைச் சீகுலைக்க அரசு முயன்று வருகிறது. இனவாத கட்சிகளுடனும், தமிழர் தேசத்துரோகக் கும்பலையும் தன்னுடன் இணைத்துக்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளைச் சீண்டிப் போருக்கு வலிந்து இழுக்கும் நடவடிக்கையில் சிறிலங்கா அரசு மறைமுகமாக ஈடுபட்டு வருகின்றது.

இவ்வாறான போருக்குச் சர்வதேச சமூகம் இடம்கொடுக்காது சிறிலங்கா அரசு மீது பொருளாதார, இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகித்து அதைச் சமாதான முயற்சிகளில் பக்கம் திருப்பிவிட முயல்வது தங்களது சர்வதேச சமூகத்தினதும் தார்மீகக் கடமையாகும்.

### சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியம்

சிங்கள அரசுகள் இனக்கொலைகள் மூலம் தமிழ் மக்களை ஒழித்துக்கட்டுவதற்கு கடைப்பிடித்துவந்த கொடிய ஒடுக்கு முறைகளின் விளைவாக சுயநிர்ணய உரிமை கோரி தமிழ் மக்கள் போராடி வருவது தெரிந்ததே.

சிறிலங்கா அரசின் 25 வருட பேரினவாத போர் அரசியலினால் பாதிக்கப்பட்டு பெரும் அழிவுகளையும், உயிரிழப்பையும் சந்தித்த எமது மக்களின் வாழ்வியலில் முன்னேற்றத்தைக் காண்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த சமாதான காலங்களில்கூட சமாதானத்தின் நன்மைகள் எமக்குக் கிட்டவில்லை. மாறாக, தென்னிலங்கையே இதன்மூலம் அதிக நன்மைகளைக் கண்டுள்ளது. சுயபலத்துடன் எம்மை நாமே மேம்படுத்துவோம் என்ற நம்பிக்கையுடன் எழுந்த எம்மக்களுக்கு, ஆழிப்பேரலை பெரும் துயரத்தை ஏற்படுத்திவிட்டது. அத்துடன், எங்களது தாயக பிரதேசம் முற்றுமுழுதாக சிறிலங்கா அரசினால் கவனிக்கப்படவில்லை என்பதற்கு இது உதாரணமாகவும் அமைந்துவிட்டது.

அழிவுகளுக்காக சர்வதேசங்களினால் வாரி வழங்கப்பட்ட பெருநிதிகளும் மனிதாபிமான உதவிகளும், பாதிக்கப்பட்ட எம்மக்களுக்கு கிடைக்கவில்லை. சிங்கள பேரினவாதிகளும் சிறிலங்கா அரசுகளும் காட்டிவந்த வரலாற்று பாரபட்சமே தொடர்ந்தும் இங்கு அரங்கேறி வருகிறது.

இதனாலேதான் எமது மக்களின் சமூக, அரசியல், பொருளாதார, பாதுகாப்பு என்பதை உறுதிப்படுத்தாத எந்த அரசையும், சிங்கள அரசியல் கட்சிகளையும் நாம் நம்புவதற்கில்லை.

எனவேதான் சிறிலங்கா அரசுக்கு அபிவிருத்தி என்ற அடிப்படையில் சர்வதேச சமூகம் வழங்குகின்ற நிதியை நாம் முழுமையாக வெறுக்கிறோம். காரணம் சிறிலங்கா அரசு போரினால் சீரழிந்துபோன தனது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் மீண்டும் போருக்குத் தன்னை தயார்ப்படுத்தவும், ஆயுதக்கொள்வனவில் கையூட்டல்களை ஊக்குவிக்கவும் இது முற்றுமுழுதாகவே உதவப்போகிறது. இவற்றில் சர்வதேச சமூகம் விழிப்பாயிருந்து சிறிலங்காவில் நடைபெறவிருக்கின்ற சர்வதேச நிதி நிறுவனங்களின் 2005 ஆம் ஆண்டின் மாநாட்டை ரத்துச்செய்யும்படி நீதியின் பெயரால் தங்களை தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம் - என்றுள்ளது.

### வட மாகாண அதிபர் சங்கம்

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு முன்பே உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை ஜனாதிபதியும் அரசும் இரட்டை வேடம் போடுகிறார்கள்.

- இவ்வாறு உதவிவழங்கும் நாடுகளை சாதுரியமாக ஏமாற்றி நிதிகளைப் பெற்றுவிட்டால் பின்னர் அதைப்பற்றி மறந்தே போவார்கள். எனவே, பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு முன்னர் உதவி வழங்கும் நாடுகள் இலங்கை அரசிடம் நிதிகள் எதையும் வழங்கக்கூடாது.

இவ்வாறு தெரிவிக்கும் மகஜர் ஒன்றை வட மாகாண அதிபர்கள் சங்கம் கண்டியில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டையொட்டி அந்நாடுகளின் தூதரகங்களுக்கு தொலைநகல் மூலம் அனுப்பியுள்ளது.

கடந்த கால சம்பவங்களையும் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் துன்பங்களையும் எடுத்துவிளக்கியுள்ள அதிபர் சங்கம் உதவி வழங்கும் நாடுகளின் நிதி ஆதாரங்களைப் பெற்றுக்கொள்ள பலவிதமான கருத்துக்களையும் அரச தரப்பினர் வெளியிட்டுவருவதாகவும், பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு முன் நிதி ஆதாரங்களை இலங்கை அரசிடம் கையளிக்கவேண்டாம் என்றும் கேட்டுள்ளது. (ப)

# சிங்களப் படை அணியின் பெயரில் ஊடகவியலாளர்களுக்கு எச்சரிக்கை

## சிவராம் கொலைக்கு உரிமைகோரிப் பிரசுரம்

கொழும்பு,மே16

'தாய் நாட்டின் எதிரிகளுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்' என்ற தலைப்பிட்ட அநாமதேய துண்டுப்பிரசுரம் ஒன்று தெற்கில் சில ஊடகங்களுக்கும், பிரமுகர்களுக்கும் கிடைத்திருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

'தெரப்புத்தாபய படையணி - மேல் மாகாணக் கட்டளைப்பீடம்' என்று அடிக்குறிப்பிட்டு 'படைத் தளபதி மாயாதுன்ன' என்று பெயரிட்ட அந்த அநாமதேய பிரசுரத்தில் 02.05.2005 எனத் திகதியிடப்பட்டிருக்கின்றது.

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலைக்குத் தாங்களே பொறுப்பு என்று உரிமைகோரும் விதத்தில் அந்தப் பிரசுரம் அமைந்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பல காலமாக சிறிலங்காவைத் தங்கள் ஆணைக்குட்படுத்த உலக ஆக்கிரமிப்பாளர்கள் ஆரம்பித்த முயற்சிகள் இந்த ஆதிபத்திய விரோதிகளுக்கு எதிராக நாட்டுப்பற்றுக்கொண்ட மக்களின் பலத்த எதிர்ப்புகள் மத்தியிலும்கூட இன்றுவரை கைவிடப்படவில்லை.

சீனா, மலேசியா, தாய்லாந்து மற்றும் இந்தியாவில் இடம்பெற்றுவரும் புரட்சிகரமான பொருளாதார மாற்றங்களைக்கண்டு நடுங்கும் இந்த ஆக்கிரமிப்பாளர்கள் சிறிலங்காவின் விடுதலைப் போராட்டம் என்ற போர்வையில் நாட்டைத் துண்டாடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள துரோகிகளான வன்னிப் புலிகளுடன் இணைந்து சமாதானம் என்னும் பெயரால் தமிழீழத்தை உருவாக்கும் முயற்சிகளில் படிப்படியாக முன்னேறி வருகின்றனர். இவ்விடயத்தில் நோர்வேக்காரர்களான வெள்ளைப் புலிகளும் பச்சைப்புலிகளான ஐ.தே.கட்சியினரும் டொலர் மூடைகளைக் காட்டி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிலுள்ள நோஞ்சான்களை ஏமாற்றி நீலப்புலிகளை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். கல்விமான்கள், புத்திஜீவிகள் மற்றும் கலைஞர்கள் என்ற போர்வையில் நடமாடும் தேசத்துரோகிகள் இந்த கபடமான சதி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குகின்றனர். தாய் நாட்டை அழிக்கும் இந்தச் சதியில் ஈடுபட்டுள்ள துரோகிகளான இவர்களுடன் ஊடகவியலாளர் எனக் கூறப்படும் தர்மரத்தினம் சிவராம் என்னும் புலி ஒருவர் மட்டுமேயாவார்.

சர்வதேச ம[illegible]லங்காவின் முகத்தில் கரியைப் [illegible] பெயரைக் கெடுப்பதற்கு சிங்களப் பெற்றோருக்குப் பிறந்து பாவத்தைக் தேடும் ஊடகவியலாளர்கள் எனக் கூறிக்கொள்ளும் வேறு சிலரின் ஒத்துழைப்பைப் பெற்று அவர் (சிவராம்) மேற்கொண்ட கேடுகெட்ட துரோக நடவடிக்கைகளுக்கு தாய்நாட்டின் சுதந்திரத்தின் பெயரால் 28.04.2005 இரவு 11.20 மணிக்கு எம்மால் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது என்பதை இந்நாட்டிலுள்ள நாட்டுப்பற்றாளர்களுக்குத் தெரிவிப்பதில் புளகாங்கிதமடைகிறோம். நாட்டைத் துண்டாட முயற்சிக்கும் - யுத்த நிறுத்தத்தை மீறும் தேசத்துரோகிகளான - ஆக்கிரமிப்பாளர்களான வன்னிப் புலிகள் மற்றும் பச்சை, வெள்ளை, நீலப் புலிகள் ஆகியோரும் அவர்களுடன் ஒன்றுபட்டு டொலர் மூடைகளை நக்கும் துரோகிகளும் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். அதாவது, இவர்களின் சதி நடவடிக்கைகளை நாம் அல்லும் பகலும் உற்றுநோக்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதேயாகும்.

தாய் நாட்டின் நன்மைக்காக நாட்டை மதிக்கும் அனைவரும் உடனடியாகத் தாய் நாட்டிற்கு உரமிடத் தயாராக வேண்டும் என மிகப் பெருமையுடன் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்று உள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே! நாடுங்கள்....

பாடப் புத்தகங்கள், உபகரணங்கள், தர உள்ளீட்டுப் பொருள்கள், மூதைனப் பொருள்கள், வாத்தியக் கருவிகள், அழிபொருள்கள், விளையாட்டுப் பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள், நுணுக்குக்காட்டிகள், அலுவலக அலுமாரிகள், புத்தக றாக்கைகள், OH.P. புறஜெக்ரர்கள், றோணியோ மெஷின் (Daito), மனித உடற் கூறுகளின் கனவுருத் தொகுதிகள், அறிவமுது, அந்திவானம் பதிப்பகங்களின் பதிப்புகள், வெளியீடுகள் யாவற்றையும் நீங்களே தெரிவுசெய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

குறிப்பு: *பாடசாலைகளுக்கு இலவச விநியோகம் வழங்கப்படும்.*

## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 5542

(சி-42832) (24-18-16)



## புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் கால நீடிப்பு

**கொழும்பு லங்கா புத்தகசாலையின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினர் மே 7 முதல் நடத்திவரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் பலரது வேண்டுகோளுக்கிணங்க மே மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் சந்தர்ப்பத்தை தவறவிடாது உங்களது புத்தகத் தேவையைப் பூர்த்திசெய்துகொள்ளுமாறு அனைவரும் வேண்டப்படுகின்றீர்கள்.**

மேலதிக விவரங்களுக்கு:
தலைவர், வணிக மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி-42838) (38-16-24-18-)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| விண்ணில் | | மண்ணில் |
|---|---|---|
| 17 - 10 - 1954 | | 16 - 04 - 2005 |



## அமரர் வீரகத்தி குல ஆனந்தன்

(நயினாதீவு)
(வடபிராந்திய போக்குவரத்துச் சபை திடீர் பரிசோதனைக் குழு அதிகாரி)

இன்று (16.05.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தந்தையாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்திய வ.பி.போ.ச. இன்னாள் - முன்னாள் உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(45405) (38-16-18-24)

30/4, சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள்,
மருமகன் மற்றும்
குடும்பத்தினர்.


# அராலிக் கிராமத்தில் தேவைமதிப்பீட்டுப் பணி

வலி.மேற்கு,மே16

'நியாப் II" உதவித் திட்டத்தின்கீழ் வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மையக் கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்ட அராலி, வண்ணபுரம் கிராமத்தின் தேவைமதிப்பீடு நாளை செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச செயலகத் திட்டமிடல் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் கிராமத்தின் தேவைமதிப்பீடு பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி இ.பானுமதி தலைமையில் நடைபெறும்.

கிராமத்தின் சகல அபிவிருத்திகள் குறிதது தேவைமதிப்பீட்டில் ஆராயப்படும் எனக் கூறப்பட்டது. (எ-175)

# பசுக்கன்றுகளின் விவரம் திரட்டப்படுகின்றது

தென்மராட்சி,மே16

தென்மராட்சிப் பிரதேசத்தில் செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் பிறந்த பசுக்கன்றுகளின் விவரங்கள் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தினால் திரட்டப்பட்டு வருகின்றன.

செயற்கைமுறைச் சினைப்படுத்தல் மூலம் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் பிறந்த பசுக்கன்றுகளுக்கு மருந்துவகைகள், கனிப்பொருள் கலவை ஆகியவை வழங்கப்படுவதுடன், அவற்றை அடையாளப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படவுள்ளது.

பிரதேசத்தில் ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் பிறந்த பசுக்கன்றுகளின் விவரங்களைப் பதிவுசெய்யுமாறு கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார். (எ-117)

# திருநெறிய தெய்வீக விழாவில் இன்று

யாழ்ப்பாணம்,மே16

திருஞானசம்பந்த சுவாமிகளின் அற்புத உற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடத்தப்படும் திருநெறிய தெய்வீக விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

தொடர்ந்து செ.அமுதினி, செ.ஜயந்தினி, எஸ்.புவிதா, கே.விதுஷா, அ.சந்திரிகா, க.தக்ஷா ஆகியோரின் வீணை இசை இடம்பெறும். வீணை இசைக்கு வி.ரமணன் மிருதங்கம் வாசிப்பார்.

அடுத்து மஞ்சுளா ராஜரட்ணத்தின் இசையரங்கு இடம்பெறும். இசையரங்கில் பக்கவாத்தியங்களாக ரோகிணிவதனி அருளையா - வயலின், வி.ரமணனின் - மிருதங்கம்.

தொடர்ந்து பிரம்மஸ்ரீ கே.இராமநாதனின் இசைக்கச்சேரி நடைபெறும். இதில் ஆர்.இராதாகிருஷ்ணன் - வயலின், எஸ்.துரைராசா - மிருதங்கம், கே.அனந்தகோபன் - கெஞ்சிரா, ஏ.செல்வரத்தினம் - கடம் வாசிப்பர். (எ-203)


## மணவறை விற்பனைக்கு

**புதிதாகச் செய்யப்பட்ட மணவறை விற்பனைக்குண்டு.**
**ஓடருக்குச் செய்தும் கொடுக்கப்படும்.**

தொடர்புகளுக்கு:
வ.ஞானசம்பந்தன்
C/O பரராஜசிங்கம்
*கருணாகரப் பிள்ளையார் கோயிலடி,*
*உரும்பிராய் மேற்கு. உரும்பிராய் (மூன்று கோயிலடி)*

(24-16-18) (45407)



## நகைச்சுவை நாடகப் போட்டியும் நாடகவிழாவும் - 2005

**உலக நாடகத் தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இவ்வாண்டு நகைச்சுவை நாடகப் போட்டியும் அது தொடர்பான விழாவினையும் ஜீலை மாத நடுப்பகுதியில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கின் கலை, இலக்கிய மன்றங்களிடையே இப்போட்டி இடம்பெறும்.**

**போட்டி விதிகள் வருமாறு:**

1. நாடகப் பிரதிகள் 45 நிமிடங்களுக்குள் மேடையேற்றப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
2. தனிப்பட்ட நபர்களை, அரசியல் கட்சிசார்ந்த விடயங்களைத் தாக்குவதாகவோ, விமர்சிப்பதாகவோ நாடகங்கள் அமைந்திருத்தல் கூடாது.
3. உளநெருக்கடியால் பாதிக்கப்பட்டு இறுகிப்போயிருக்கும் மனங்களை விடுவிக்கும் பொருட்டாக நாடகங்கள் அமைந்திருத்தல் நன்று.
4. நாடகப் பிரதிகள் ஜீன் முதலாம் வாரத்திற்குள் எமக்குக்கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
5. பரிசுக்குரியதாகத் தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று நாடகங்களுக்கும் பணப்பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**மேலதிக விவரங்களுக்கு:**
**உதவிப் பணிப்பாளர்,**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**கல்வி அமைச்சு,**
**வ.கி.மா.**
**திருகோணமலை.**

என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

**திரு.ஆர்.தியாகலிங்கம்,**
*செயலாளர்,*
*கல்வி அமைச்சு.*

(சி-42830) (18-24-16)



## கேள்வி அறிவித்தல்

1. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முத்தையன்கட்டுப் பகுதியில் கூட்டுறவுச் சபைக் கட்டடம் அமைப்பதற்கான கேள்வி - பொருத்தமான கட்டட ஒப்பந்தகாரர்களிமிருந்து கோரப்படுகின்றது. கேள்வி கோரும் ஒப்பந்தகாரர் இக்ராட் தரம் (எம்6) இல் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். கேள்வி கோருவோர் மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 1,000/- உம், மீளளிப்பு வைப்புப் பணமாக (கேள்விப்பிணைப்பணம்) 160,000/- உம் செலுத்தி கேள்விப் பத்திரங்களை முல்லைத்தீவுக் கச்சேரியிலுள்ள புனர்வாழ்வுக் கிளையில் 2005-05-30 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
2. பூரணப்படுத்தப்பட்ட ஏ, பீ கேள்விப்பத்திரங்களைத் தனித் தனியே மூடப்பட்ட தபாலுறையில் இட்டு அரச அதிபர், முல்லைத்தீவு என்ற விலாசத்திற்கு முகவரியிட்டுப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென புனர்வாழ்வுக் கிளையில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ 2005-06-15 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
3. கேள்விகள் 2005-06-15ஆம் திகதி புதன்கிழமை அன்றைய தினமே பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி கோரியோரோ அல்லது கேள்வி கோரியோரின் எழுத்துமூலமான பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

**(திருமதி இமெல்டா சுகுமார்)**
**மாவட்ட கேள்விச் சபைத் தலைவரும் அரச அதிபரும்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி-42829) (18-24-16)



## வடமாகாண அதிபர்கள் சங்கம் நடத்தும் துரித மீட்டல் செயலமர்வு

அனுசரணை வழங்குவோர்
யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை
யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு
யாழ். மத்திய கல்லூரி லியோ கழகம்

**16, 17, 18, 19, 20, மே - 2005**

யாழ். மத்திய கல்லூரி - 17, 18, 19 மே 2005
- யாழ். வலிகாம, தீவக மாணவர்களுக்கு
நெல்லியடி மத்திய கல்லூரி - 17, 18, 19 மே 2005
- வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களுக்கு
கிளிநொச்சி மத்திய கல்லூரி - 16, 20 மே 2005
- கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்களுக்கு

### PROGRAMME TIME TABLE

8.00 a.m. - 8.15 a.m. : Registration
8.15 a.m. - 8.30 a.m. : Inaugration

| TIME | JAFFNA | | | NELLIADY | | |
|---|---|---|---|---|---|---|
| | 1st Day | 2nd Day | 3rd Day | 1st Day | 2nd Day | 3rd Day |
| 08.30 a.m. - 10.30 a.m. | Phy - I | Che - I | Com. M/Bio. - I | Com. M/Bio. - I | Phy - I | Che - I |
| 10.30 a.m. - 10.45 a.m. | Tea | Tea | Tea | Tea | Tea | Tea |
| 10.45 a.m. - 12.45 p.m. | Phy - II | Che - II | Com. M/Bio. - II | Com. M/Bio. - II | Phy - I | Che - II |
| 12.45 p.m. - 01.30 p.m. | Lunch | Lunch | Lunch | Lunch | Lunch | Lunch |
| 01.30 p.m. - 03.00 p.m. | Phy - III | Che - III | Com. M/Bio. - III | Com. M/Bio. - III | Phy - I | Che - III |
| 03.00 p.m. - 03.15 p.m. | Tea | Tea | Tea | Tea | Tea | Tea |
| 03.15 p.m. - 05.00 p.m. | Phy - IV | Che - IV | Com. M/Bio. - IV | Com. M/Bio. - IV | Phy - I | Che - IV |

**விரிவுரையாளர்கள்:**
இணைந்த கணிதம்: திரு. S.பிரேம்நாத், திரு. A.குணசிங்கம்
பௌதிகவியல்: திரு. S.கணேசன், திரு. S.P.குணசீலன்
இரசாயனவியல்: திரு. S.நித்தியானந்தன், திரு.இராஜதேவா
உயிரியல்: திரு. V.குகாதரன், திரு. R.ஈஸ்வரதாஸன்

(சி-42841) (18-24-16)

விளம்பர அனுசரணை: சியானாஸ் ரெயிலறிங், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 678 |
| திகதி | 13-5-2005 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
5415934-5431065

லக்கினம் இடபம்

வெற்றி இலக்கங்கள்
12 16 31 43

ஜக்பொட் பரிசு
ரூபா.31,89,500/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை
ரூபா. 39,41,300/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 2.இலக்கங்கள் | 30,864 | 20/- | 6,17,280/- |
| 1.இல லக்கினம் | 30,666 | 30/- | 9,19,980/- |
| 2.இல லக்கினம் | 2,822 | 100/- | 2,82,200/- |
| 3.இலக்கங்கள் | 835 | 500/- | 4,17,500/- |
| 3.இல லக்கினம் | 65 | 5,000/- | 3,25,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 24,42,300/- | - |
| மொத்தம் | 3,99,522 | - | 73,79,380/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 73,79,380/-

5430138-4-76
5426459-6-37
5424441-5-92
5417700-6-65
5420790-7-90


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லைப்படை மாவீரர் கிண்ண உதைபந்தாட்டம்:

# பல்கலை. அணி ஆட்டத்தை நிறுத்தியது! சென். மேரிஸ் அணிக்கு வெற்றி அறிவிப்பு!!

வலி.வடக்கு,மே16

எல்லைப்படை மாவீரர்கள் நினைவுக் கிண்ணத்துக்காக நேற்றுமுன்தினம் இரவு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் - மின்னொளியில் நடைபெற்ற - உதைபந்தாட்ட இறுதிப் போட்டி ரசிகர்களுக்குப் பலத்த ஏமாற்றமாக முடிந்தது.



வீரர்களின் அறிமுகத்தின்போது...

ஆட்டத்தின் இடையில் ஏற்பட்ட குழப்பம் காரணமாகப் பல்கலைக்கழக அணி ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதனால், எதிர்த்து ஆடிய நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்டது.

'உதயன்' ஊடக அனுசரணையுடன் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தைக் கண்டு ரசிப்பதற்காகப் பெரும் எண்ணிக்கையான பார்வையாளர்கள் மைதானத்தில் விடியவிடியக் கூடியிருந்தனர்.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகிய 15ஆவது நிமிடத்தில் பல்கலைக்கழக அணியினரால் கோல் கம்பத்தை நோக்கி அடிக்கப்பட்ட பந்து, கோல் கம்பத்தின் மேற்பரப்பு ஊடாக - வெளிப்புறமாக - வலையைத்தடவிச் சென்று வெளியே வீழ்ந்தது. ஆனால், மத்தியஸ்தர் அதனைக் 'கோல்' என்று கருதி முடிவு செய்ததால் விளையாட்டில் குழப்பம் ஏற்பட்டது.

பந்து கோல் கம்பத்தின் உள்ளேயா அல்லது வெளியிலா என்பதை உதவி மத்தியஸ்தர் தீர்மானிப்பதற்கு முன்னரே பிரதம மத்தியஸ்தர் தவறான முறையில் கொடியை சைகை செய்தார் என்று கூறப்படுகிறது.

கோல் கம்பத்தின் வலையுடன் நெருக்கமாக அமர்ந்திருந்த பார்வையாளர் ஒருவர் அந்தச் சந்தர்ப்பத்தில் என்ன நடக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ளாமல் வலையின் கீழ் புறத்தால் பந்தை உள்ளே தள்ளிவிட்டார்.

இதேவேளை, பந்து 'கோல்' கம்பத்துக்கு வெளியே சென்றதை உணர்ந்து கொண்ட மத்தியஸ்தர் தனது தீர்ப்பை உடனடியாக மாற்றி, ஆட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கான உதை ஒன்றை (Out Kick) அடிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆனால், பல்கலைக்கழக அணியினர் தொடர்ந்து ஆடுவதற்கு மறுத்து விட்டனர்.

இந்தக் கூட்டத்தில் ரசிகர்கள் சிலரும் பல்கலைக்கழக மாணவர்களும் மைதானத்தில் இறங்கியதால், ஆட்டத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

ஆட்டத்தில் இடம்பெற்ற குழப்பத்துக்கான காரணத்தின் உண்மை நிலையைப் பல்கலைக்கழக அணியினருக்கு விளக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

துணைவேந்தர் உட்பட உடற்கல்வி விரிவுரையாளர்கள் மற்றும் மத்தியஸ்தர்கள் ஆட்டத்தில் இடம்பெற்ற தவறைச் செவ்வனே மதிப்பிடுவதற்காக ஆட்டத்தின் வீடியோ நாடாவைப் பார்வையிட்டனர்.

ஆனால், முடிவை ஏற்பதற்குப் பல்கலைக் கழக அணியினர் ஒரேயடியாக மறுத்துவிட்டனர்.

தாங்கள் தொடர்ந்து விளையாட விரும்பாததால் சென்.மேரிஸ் அணியின் வெற்றியை ஏற்றுக்கொள்வதாகப் பல்கலைக்கழக அணியினர் தெரிவித்தனர்.

சென். மேரிஸ் அணி வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்டது. (ஐ-86)

## இரு ஆட்டங்களில் உடுவில் மான்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,மே16

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியிலும் ஆண்களுக்கான பட்மின்ரன் போட்டியிலும் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளது.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**பூப்பந்தாட்டம்**

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**பட்மின்ரன்**

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், யாழ். இந்துக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி. (3-190-203)

விளையாட்டு

## எல்லைப்படை மாவீரர் நினைவு: உதைபந்தாட்டம் ஒரு பார்வை

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் உதயனின் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் மின்னொளியில் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில், 40 வயதுக்கு மேற்பட்டோர் பிரிவில், யாழ்.லீக் உதைபந்தாட்ட அணியும் கழகங்களுக்கு இடையேயான போட்டியில், சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியும் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கழகங்களுக்கு இடையேயான இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியும், யாழ்.லீக்கைச் சேர்ந்த நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் முதல்பாதி ஆட்டத்தின் போது சென்.மேரிஸ் அணி ஒரு கோலைப் பெற்று முன்னணியில் நின்றது.

வலது பக்க முன்னணி வீரன் விக்டர் பந்தை வலது பக்கத்தில் இருந்து மிகவும் வேகமாக எதிரணி வீரர்களை வெட்டிஎடுத்து கோல் கம்பத்தின் முன்பகுதியை நோக்கி நகர்த்திக்கொண்டு வந்தார். இந்நேரத்தில் யாரும் எதிர்பாராவண்ணம் முன்நோக்கி திடீரென நகர்ந்த முன்னணி வீரன் விம்சிங், விக்டரின் கால்களில் இருந்த பந்தை பெற்றவுடன் எதிரணியினரை ஊடறுத்து கோல் கம்பத்தினுள் அடித்து அணிக்கான முதலாவது கோலை 18ஆவது நிமிடத்தில் பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்து விளையாட்டு சூடுபிடித்த நிலையில் 30 ஆவது நிமிடத்தில் பல்கலைக்கழக அணி வீரர் கோல்கம்பத்தினை நோக்கி அடித்த பந்தை சென். மேரிஸ் அணி வீரன் ஒருவர் கையால் எட்டித் தடுத்தமைக்காக மத்தியஸ்தரினால் மஞ்சல் அட்டைகாட்டி எச்சரிக்கப்பட்டார்.

முதல்பாதி ஆட்டம், சென்.மேரிஸ் விளையாட்டுக்கழம் ஒரு கோலைப்பெற்ற நிலையில் முடிவடைந்தது.

ஊடக அனுசரணை

உதயன்

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணிகளும் புதிய உத்வேகத்துடன் விளையாடின. ஆட்டம் ஆரம்பமாகி சுமார் 15 நிமிடம் சென்ற நிலையில் பல்கலைக்கழக அணி வீரன் மேலால் தூக்கி அடித்த பந்து வெளியால் சென்ற போதிலும் மத்தியஸ்தர் கொடுத்த தீர்ப்புக் காரணமாக எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து ஆட்டம் குழப்பமான நிலைமைககு சென்றது. இறுதியில் பல்கலைக்கழக அணியினர் தாம் தொடர்ந்து விளையாடாது சென. மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கு வெற்றியை கொடுப்பதாக தெரிவித்து வெளியேறினர்.

40 வயதுக்கு மேற்பட்டோருக்கான இறுதி ஆட்டத்தில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியும், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அணியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளுமே ஓர் அணிக்கு மறு அணி சளைத்தவை அல்ல என்ற நிலையில் விளையாடி ரசிகர்களின் பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டன.

முதல்பாதி ஆட்டம் முடியடைய 2 நிமிடங்கள் இருக்கும் நிலையில் யாழ்.லீக்கைச் சேர்ந்த முன்னணி வீரர் தர்மகுலசிங்கம் அடித்த பந்தை வலிகாமம் லீக்கின் பின்னனி வீரன் தடுத்து ஏற்றி விளையாட முயன்றபோது அது காலில்பட்டு யாழ்.லீக்கின் மற்றோர் இடது முன்னணி வீரர் பாஸ்கரனிடம் செல்ல அவர் அதனை கோல் கம்பத்தினுள் அடித்து தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டார்.

இரண்டாம்பாதி ஆட்டமும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குக்குகே சாதகமாக அமைந்து இருந்தபோதிலும் கோல்களைப் பெறக் கூடியவாய்ப்பினைத் தவறவிட்டார்கள்.

இறுதியில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வலிகாமம் லீக் அணியை வென்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (ஐ-86)

## ஆசிரியர்களுக்கான வலைபந்தாட்டப் பயிற்சி

முல்லைத்தீவு.மே16

இலங்கை வலைபந்தாட்டச் சம்மேளனத்தினால் பாடசாலை ஆசிரியர்களுக்கான வலைபந்தாட்டப் பயிற்சி வகுப்பு ஒன்றை எதிர்வரும் ஓகஸ்ட் 8 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை கொழும்பில் நடத்தவுள்ளது.

40 வயதிற்கு உட்பட்ட அரச பாடசாலைகளில் வலைபந்தாட்டப் பயிற்சிகளை வழங்கும் சகல ஆசிரிய, ஆசிரியைகள் இப் பயிற்சி வகுப்புக்கு விண்ணப்பிக்க முடியும். இது தொடர்பான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் இது தொடர்பான சுற்றறிக்கை என்பன சகல கல்வி வலயங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கவிரும்புவோர் வலய அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாக 'கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி மற்றும் விளையாட்டு), உடற்கல்வ மற்றும் விளையாட்டுக்கிளை, கல்வி அமைச்சு, இசுறு பாய, பத்திரமுல்லை' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இப்பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் முல்லைத்தீவுக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் வலைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளர் தமக்குரிய விண்ணப்பங்களை முல்லைக்கல்வி வலயத்தில் பெற்று எதிர்வரும் 15 ஆம திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு முல்லை வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மைக்கல் திலகராஜா கேட்டுள்ளார். (3-410-353)

## யாழ். வலயப் பாடசாலைகளின் மேற்பிரிவு போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே16

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லமைப் போட்டிகள் முடிவடைந்துள்ளன. இந்தப் போட்டிகளின் ஆரம்பப் பிரிவு முடிவுகள் கடந்த 12ஆம் திகதி 'உதயனில்' வெளியாகியிருந்தன.

மேற்பிரிவின் 15வயது, 17வயதுப் பிரிவுகளின் முடிவுகள் வருமாறு:-

### 15 வயதுப் பிரிவு ஆண்கள்

**100 மீற்றர்** - எஸ்.பாலமுரளி (சென். ஜோன்ஸ்), கே.ரூபவினோத் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ்.மிலாண்டோ (சென். பற்றிக்ஸ்).

**200 மீற்றர்** - கே.ரூபவினோத் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ்.மிலாண்டோ (சென்.பற்றிக்ஸ்), எஸ்.பாலமுரளி (சென்.ஜோன்ஸ்).

**400 மீற்றர்** - எஸ்.ஜீவநாதன் (சென்.பற்றிக்ஸ்), எஸ்.வளனிமோகன் (சென். பற்றிக்ஸ்), ரி.செழியன் (யாழ். இந்துக்கல்லூரி).

**உயரம் பாய்தல்** - யூ.ராகுல் (நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை), எஸ்.பாலசங்கர் (யாழ். மத்திய கல்லூரி), ஆர்.சதீசன் (யாழ். இந்துக் கல்லூரி).

**நீளம் பாய்தல்** - யூ.ராகுல் (நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை), எஸ். ஹரீஸ் (யாழ். மத்திய கல்லூரி), எஸ்.ஹஷைநாத் (ஒஸ்மானியாக கல்லூரி).

**குண்டு எறிதல்** - எஸ்.கஜீபன் (யாழ். இந்துக் கல்லூரி), கே.பிரகாஷ் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ்.முஜனாத் (யாழ். மத்திய கல்லூரி).

**தட்டெறிதல்** - ரி.லவன் (யாழ். மத்திய கல்லூரி), ஆர்.கஜீபன் (சென்.ஜோன்ஸ்), கே.ரூபவினோத் (யாழ். இந்துக் கல்லூரி).

**ஈட்டி எறிதல்** - எஸ்.நிரோஜன் (யாழ். மத்திய கல்லூரி), கே.பிரசன்னா (சென். ஜோன்ஸ்), எஸ்.இளங்கோ (சென்.ஜோன்ஸ்).

**100 மீற்றர் தடை தாண்டல்** - எஸ்.ஜனகன் (யாழ். இந்துக் கல்லூரி), பி.நிரோஜன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ஆர்.பவீந்திரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**4X100 அஞ்சல்** - சென். பற்றிக்ஸ், யாழ். இந்துக் கல்லூரி, சென்.ஜோன்ஸ்.

### பெண்கள்

**100 மீற்றர்** - இ.யஸ்மிலா (சென். அன்ரனீஸ் பெண்கள் பாடசாலை), ஜீ.பரிஸ்கிலா (கோப்பாய் நாவலர் வித்தி.), எஸ்.பானுஜா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**200 மீற்றர்** - ஜீ.பிரிஸ்கிலா (கோப்பாய் நாவலர் வித்தி.), அ.யஸ்மிலா (சென்.அன்ரனீஸ் பெண்கள் பாடசாலை), யூ.கம்சினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**உயரம் பாய்தல்** - மொறின் ரூபினா (திருக்குடும்ப கன்னியர் மடம்), யூ.சோமினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), பி.தாரிணி (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**நீளம் பாய்தல்** - எஸ்.நிருத்திகா (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.பானுஜா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), மொறின்ரூபினா (திருக்குடும்ப கன்னியர் மடம்).

**குண்டு எறிதல்** - ஜே.பிரியா (வேம்படி மகளிர் கல்லூரி), மொறின்[illegible] (திருக்குடும்ப கன்னியர் மடம்), எஸ்.[illegible] (வேம்படி மகளிர் கல்லூரி).

**தட்டு எறிதல்** - ரி.கார்த்திகா (அத்தியார் இந்துக் கல்லூரி), ஜே.பிரியா (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.யசோதரா (வேம்படி மகளிர் கல்லூரி).

**ஈட்டி எறிதல்** - எஸ்.யசோதரா (வாதரவத்தை விக்னேஸ்வரா), எஸ்.மடோனா (சென். சாள்ஸ் ம.வித்தி.), எஸ்.யசோதரா (வேம்படி மகளிர் கல்லூரி).

**100 மீற்றர் தடைதாண்டல்** - யூ.சோமினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), கே.கஜலக்ஷ்சி (திருக்குடும்ப கன்னியர் மடம்), ரி.துஷாரா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**4X100 அஞ்சல்** - சென்.தெரேசா பெண்கள் பாடசாலை, யாழ். இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி.

### 17 வயதுப்பிரிவு - ஆண்கள்

**100 மீற்றர்** - எஸ்.தர்ஷன் (சென்.ஜோன்ஸ்), மி.நவயுகன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ். சியாம்குமார் (யாழ். இந்துக் கல்லூரி).

**200 மீற்றர்** - எஸ்.பரியீஸ் (சென்.பற்றிக்ஸ), எஸ்.டயான் (யாழ். மத்திய கல்லூரி), எஸ். சியாம்குமார் (யாழ். இந்துக் கல்லூரி).

**400 மீற்றர்** - எஸ்.டயான் (யாழ். மத்திய கல்லூரி), ஆர்.சேந்தன் (சென். பற்றிக்ஸ்), எஸ்.சுஜந்தன் (சென்.ஜோன்ஸ்).

**800 மீற்றர்** - ஆர்.சேந்தன் (சென்.பற்றிக்ஸ்), எஸ்.வியாசன் (யாழ். மத்திய கல்லூரி), எ.பி.எம். அமல்சன் (நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை).

**1,500 மீற்றர்** - எஸ்.வியாசன் (யாழ். மத்[illegible]), எஸ்.டெனிஜென்சன் (சென். பற்றிக்ஸ்), கே.டினோசன் (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.).

**110 மீற்றர் தடைதாண்டல்** - ஜே.வியாசன் (சென்.ஜோன்ஸ்), மி.கேதீசன் (சென்.பற்றிக்ஸ்), வி.தினேஸ்குமார் (சென்.ஜோன்ஸ்).

**உயரம் பாய்தல்** - எஸ்.மயூரன் (யாழ். மத்திய கல்லூரி), எஸ்.நிஷாந்தன் (சென். பற்றிக்ஸ்), எஸ்.நிரஞ்சன் (யாழ். இந்துக் கல்லூரி).

**நீளம் பாய்தல்** - எஸ்.பிரிந்தாபன் (யாழ். நாவலர் ம.வித்தி.), எஸ்.சியாம்குமார் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.அரவிந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**கத்தி மிதித்துப் பாய்தல்** - பி.நிதர்சன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.சாமிளன் (சென். ஜோன்ஸ்), வி.அனோஜன் (கொக்குவில இந்துக் கல்லூரி).

**கோல் ஊன்றிப் பாய்தல்** - எஸ்.சினமல்லருஷன் (சென்.ஜோன்ஸ்), வி.தர்ஷிகன் (சென. ஜோன்ஸ்), வி.கௌசிகன் (யாழ் இந்துக் கல்லூரி).

**குண்டு எறிதல்** - எஸ்.துமேஷன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ்.துஷ்யந்தன் (சென். ஜோன்ஸ்), எஸ்.கவிந்தன் (யாழ். மத்திய கல்லூரி).

**தட்டு எறிதல்** - எஸ்.சுரேந்திரன் (சென். பற்றிக்ஸ்), எஸ்.மயூரன் (யாழ். மத்திய கல்லூரி), கே.நீதீபன் (வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி.).

**ஈட்டி எறிதல்** - எஸ்.வாகீசன் (யாழ். இந்துக கல்லூரி), எஸ்.டெனிஜேன்சன் (சென். பற்றிக்ஸ்), கே.சுரேந்திரன் (சென். பற்றிக்ஸ்).

**4X100 அஞ்சல்** - சென். ஜோன்ஸ், சென். பற்றிக்ஸ், யாழ். மத்திய கல்லூரி).

**4X400 அஞ்சல்** - யாழ். மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ், சென்.ஜோன்ஸ். (3-203)

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு
உங்கள் பிரயாண சீட்டுக்களைப் பெற நாடுங்கள்
ராஜா தியேட்டர், ராஜா கொம்மினிக்கேசன்
205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 6825, 222 2318, 222 7332, 222 7334
(24-18-16) (C-42845)


## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமைபுரியும் திருமதி லிங்கேஸ்வரபாலன் மங்கையர்க்கரசி அவர்களின் பாசமிகு தந்தையார்

### வேலாயுதர் செல்வநாயகம்



அவர்களின் மறைவினால் மிகுந்த துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடுபத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரச அதிபர் பணிமனை. மருதங்கேணி. (சி-42840) (18-24-16) சமுர்த்தி முகாமையாளர்களும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்.

## எங்கள் நெஞ்சைவிட்டு நீங்காத 2ஆம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 31 - 10 - 1916



மறைவு 09 - 05 - 2003

### அமரர் நாகலிங்கம் கந்தையா

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: வளர்பிறை அட்டமி (16-05-2005)

இரண்டு ஆண்டுகள் நகர்ந்தாலும் - உங்கள்
அழியாத நினைவுகள்
நாங்கள் வாழும்வரை என்றும்
எங்கள் மனங்களில் நிறைந்திருக்கும்!

அத்தியடி, யாழ்ப்பாணம். (45414)(46-18-24-16) மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை.


## 14.05.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிதா வசனாவ
சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300263084 இலிருந்து 300280334 வரை

சீட்டிழுப்பு இல. 1606

08 15 37 51 சுப்பர் எண் 10

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.44,95,500/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 44,95,500/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 25 | 5,000/- | 1,25,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 469 | 1,000/- | 4,69,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,425 | 500/- | 7,12,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,354 | 40/- | 8,94,160/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,270 | 20/- | 4,25,400/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,17,603 | 10/- | 31,76,030/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 83,02,090/-

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 53,44,050/-

தொடர் இல. 200300641 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2005 மே 18 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

300279452-6-49
300276599-6-95
300275524-5-18
300266647-3-78
300264639-1-76

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



கடும் வெயிலினால் களைப்படைந்துவிட்டீர்களா?
இதோ இருக்கவே இருக்கிறது!
5 ஸ்டார் கிறீம் ஹவுஸ்
✦ குளிர்பானங்கள்
✦ ஐஸ்கிறீம் வகைகள்
✦ சர்பத், சோடா வகைகள்
✦ பிஸ்கட் வகைகள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள்!
5 ஸ்டார் கிறீம் ஹவுஸ்
131, பிரதான வீதி, யாழ்.


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளரும், நலன்விரும்பியுமான பேராசிரியர் கா.குகபாலன் அவர்களின் புதல்வியான

### திருமதி கார்த்திகேயன் திருமகள்

அவர்களின் பிரிவை அறிந்து ஆறாத்துயரடைகிறோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்லூரிச் சமூகம்
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(45423)(33-18-16-24)

## கருத்தரங்கு

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பகுதி 'டி' நடத்தும் 2ஆவது கருத்தரங்குத் தொடர் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் பொருளியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'புலம்பெயர்ந்த நாடுகளில் சமூக மீளுருவாக்கம்' என்னும் பொருளில் மொழியியற்றுறை முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி பார்வதி கந்தசாமி கருத்துரை நிகழ்த்துவார். (எ-204)

## தீவகக் கல்வி வலயத்தில் தமிழ்த்தினப் போட்டிகள்

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை முதல் நடைபெறவுள்ளன.

எழுத்தாக்கப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ள பாடசாலை விவரம் வருமாறு:-

நெடுந்தீவுப் பிரதேச பாடசாலைகள் - நெடுந்தீவு வித்தி., ஊர்காவற்றுறைப் பிரதேச பாடசாலைகள் - புனித அந்தோனியார் கல்லூரி, காரைநகர் பிரதேச பாடசாலைகள் - கலாநிதி தியாகராசா ம.ம.வித்தி., புங்குடுதீவுப் பிரதேச பாடசாலைகள் - புங்குடுதீவு வித்தி., நயினாதீவுப் பிரதேச பாடசாலைகள் - நயினாதீவு வித்தி., அனலைதீவுப் பிரதேச பாடசாலைகள் - அனலைதீவு சதாசிவம் ம.வி. எழுவைதீவு பிரதேச பாடசாலைகள் - எழுவைதீவு றோ.க. வித்தி. ஆகியவற்றில் நடைபெறும்.

கலைத்திறன் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் -

நாட்டுக்கூத்துப் போட்டிகள் 22ஆம் திகதி காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் நடைபெறும். (எ-204)

## தீவகத்தில் நான்கு தினங்கள் இலவச மருத்துவமுகாம்

தீவகப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் நலன்கருதி ஐ.ஒ.எம். நிறுவனம் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்றினை எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் நான்கு தினங்கள் நடத்தவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் கண்பார்வை குறையுள்ளவர்கள், காது கேட்கும் சக்தி குறைந்தவர்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்படும்.

சிகிச்சை தேவைப்படும் பாடசாலை மாணவர்களை அதிபர்கள் தத்தமது பாடசாலைகளூடாக மருத்துவமுகாமில் பங்கேற்கச் செய்ய வேண்டும் என்றும் - அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவமுகாம் நடைபெறவுள்ள திகதி, நேரம், இடம் பற்றிய விவரங்கள் வருமாறு:-

20ஆம் திகதி காலை 8 மணி நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை.

21ஆம் திகதி காலை 8 மணி ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை.

22ஆம் திகதி காலை 8 மணி புங்குடுதீவு மகா வித்தியாலம்.

23ஆம் திகதி காலை 8 மணிக்கு வேலணை அரசினர் வைத்தியசாலை.(எ-204)

## நுளம்புவலை விநியோகம்

ஆழிப்பேரலை பாதித்த தொண்டைமானாறு தெற்கு கிராமத்தைச் சேர்ந்த 200இற்கும் அதிகமான குடும்பங்களுக்கு சந்தியான் ஆச்சிரமத்தில் வைத்து அண்மையில் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 11ஆம் திகதி நுளம்பு வலைகள், கதிரைகள் மற்றும் பிஸ்கட் வகைகள் உட்பட ஒரு குடும்பத்திற்கு ஐயாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

'வேர்ல்ட் விசன்' நிறுவனம் இப்பொருட்களை வழங்கியிருந்தது. (எ-36)


J.CITY TELE COM
விசேட சலுகை
வெளிநாட்டு அழைப்புகள்
கனடா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ~
நிமிடத்திற்கு 3.50/- மட்டுமே
59/2, பெரியகடை, யாழ்ப்பாணம் (மலாயன் கபே அருகில்).
222 8072
(45411) (18-24-16)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி காசிப்பிள்ளை இலட்சுமி



சுன்னாகம், அந்தோனியார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காசிப்பிள்ளை இலட்சுமி அவர்கள் 13.05.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் செல்லத்துரை, தம்பிராசா, நாகபூரணம், நவரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமணி, விஜயலட்சுமி, காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் செல்வமணி, லூசியா, நவரத்தினமணி, கனகரத்தினம், தங்கரத்தினம், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் நாகரத்தினம் (ஜேர்மனி), இராசரத்தினம் (கனடா), அழகரத்தினம் (லண்டன்), சற்குணானந்தரத்தினம் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான லியோ, சிவநாதபிள்ளை, தங்கரத்தினம் மற்றும் நாகேஸ்வரி, லோகேஸ்வரி (கனடா), மீனலோஜினி, பரஞ்சோதிலிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜோய் லோறிற்றா, யோகமலர், சொர்ணலதா, பிறேமலதா, விஜயலதா, சந்திரலதா, சாந்தி நிவேதன், கருணாநிவேதன், சாந்தினி, சிறிதரன், சுமதி, கிருபாகரன், ரூபி, பகீரதன், நஜீபா, சஞ்சீவ்குமார், சர்மிளா, ஜெனா, சுவீற்றி, பிறேந்திரா, சக்தியேந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வேணுஷா, லியோனி, லியோறின், ப்றையன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-05-2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புனித அந்தோனியார் கோயிலடி, சுன்னாகம்.* (45417)(18-24-16)

தகவல்: கனகரத்தினம் (மகன்).

### நாகலிங்கம் கந்தசாமி (ஆசாரியார்)



வட்டுக்கோட்டை, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தசாமி (சாமியார்) அவர்கள் நேற்று (15-05-2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சின்னராசா - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் நாகரஞ்சினி, புவனேஸ்வரன் (வவா) அவர்களின் அன்புத் தந்தையும் குகதாசனின் (வெள்ளை) மாமனாரும் தனுசன், தனுசியா, அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் வைத்திலிங்கம், பத்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-05-2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நவாலி வளுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோயிலடி, வட்டுக்கோட்டை.* (45421)(18-24-16)

தகவல்: புவனேஸ்வரன் (வவா - மகன்).

### கந்தையா கிருஸ்ணபிள்ளை



9ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் இல.128, வில்சன் வீதியைப் வதிவிடமாகவும் சிவசக்தி மில் உரிமையாளராகிய கந்தையா கிருஸ்ணபிள்ளை 14.05.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் பொன்னுத்துரை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் குகேந்திரகுமார், மாவீரர் நடனகுமார் (கிளியன்), காலஞ்சென்றவர்களான சுமதி, நடேஸ்வரி, வசந்தி (பிரான்ஸ்), திருக்குமார், டுவிஸ்ராணி, சாந்தி ஆகியோரின் தந்தையும் இதயகுமார் (பிரான்ஸ்), கிருபாரதி, யோகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் கனகசுந்தரம், பரமலிங்கம், வைத்திலிங்கம், காலஞ்சென்ற பகவதி ஆகியோரின் சகோதரரும் அனுஜன், அஜிவா, அபிலன், டிசாந்த குமார், டர்சிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (16.05.2005) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-42850)(18-24-16)

தகவல்: கி.குகேந்திரகுமார் (மகன்).

### திருமதி முருகையா சோதியம்மா (சோதி)



காளிகோயிலடி, மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி முருகையா சோதியம்மா (சோதி) அவர்கள் 14.05.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் முருகையாவின் அன்பு மனைவியும் ரகுராஜ் (சுவிஸ்), அருள்ராஜ் (கனடா), தர்மினி, குகராஜ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சர்வேஸ்வரன் (கிளி), யனுஜா, கவிதா ஆகியோரின் மாமியும் கேனுஜாவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*காளிகோயிலடி, மல்லாகம், 0777 105837* (45422)(18-24-16)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் தனி ராச்சியம் நடத்துகின்றார்கள்தான் பீற்றர் ஹரோல்ட் சொன்னதில் தவறேதுமில்லை!

**பிரபல சிங்கள இலக்கியவாதியும் ஊடகவியலாளருமான "சுசரித ஹம்லத்" ஜே.வி.பியினரின் சொல்லொன்றும் செயலொன்றுமான அரசியல் அணுகுமுறை குறித்தும் பொதுமக்களது உணர்வுகளைத் தூண்டி அவர்களை வீதியில் இறக்கி அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்தும் போக்குக் குறித்தும் கடுமையாக விமர்சித்து கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். 'இருதின' என்ற சிங்களப் பத்திரிகையில் வெளியாகிய அந்தக் கட்டுரையின் தமிழ் வடிவத்தினை இங்கு தருகின்றோம்.**

தலைநகர் கொழும்பிலும் சரி, ஏனைய நகர்ப்புறங்கள், கிராமப்புறங்களிலும் சரி, மதிற்சுவர்கள், வாயிற்கதவுகள் மற்றும் வசதிப்பட்ட சகல இடங்களிலும் சிறப்புவர்ணப் பின்னணியில கவர்ச்சிகரமான பெரிய அளவிலான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அவற்றை அவ்விதம் ஒட்டியவர்கள் ஜே.வி.பியினரே.

அந்த நாள்களில் கொழும்பின் புறநகர் சூழலில் அமைதி குலைவுண்டது. ஜேவிபி தலைவர்கள் மலையைப் பிளக்கும் தொனியில் ஆவேச, ஆக்ரோச தொனியில் மேற்கொண்ட கோஷமே அந்த அமைதிச்சூழல் பாதிப்படைந்தமைக்கான காரணமாகும்.

ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளில் காணப்பட்ட வாசகங்கள் எந்தவித அர்த்தமுமற்றவை அவை வெறும் தூஷிக்கும் வகையிலான - திட்டித் தீர்க்கும் வகையிலமைந்த வார்த்தைகளாகவே காணப்பட்டன.

"பீற்றர் ஹரோல்டை வீட்டுக்கு அனுப்பு"

"பீற்றர் ஹரோல்டை நாடு கடத்து"

அந்தச் சுவரொட்டிகளில் காணப்பட்ட வாக்கியங்கள் முற்றுமுழுதாக மேற்சொன்ன விடயத்தையே வற்புறுத்துவதாக அமைந்திருந்தன.

அவர்கள் ஒழுங்குசெய்து நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும் இவ்விடயத்தை வற்புறுத்தும் வகையிலான கோஷங்களே எழுப்பப்பட்டன.

பீற்றர் ஹரோல்ட் உலகவங்கியின் இலங்கைக்கான விதிவிடப் பிரதிநிதி என்பது பலருக்கும் தெரிந்தவிடயமே.

உலகவங்கியோ இன்று உலகின் சகல நாடுகளையும் கட்டுப்படுத்தியும் நிர்வகித்தும் வரும் விதத்தில் செயற்பட்டுவரும் பலம் வாய்நததொரு அமைப்பாகும்.

பீற்றர் ஹரோல்ட் அந்த உலகவங்கியின் நம்பிக்கைக்குரிய விசுவாசம் மிக்கதொரு ஊழியராவார். பீற்றர் ஹரோல்ட் அண்மையில் கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்த கருத்தே இத்தனை குழப்பங்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் காரணமாக அமைந்துவிட்டது.

தமிழ் மக்கள் வாழும் குறிப்பிட்டதொரு பிரதேசததில் அங்கக்ரிக்கப்படாத சுதந்திரமான நிர்வாகமொன்று செயற்படுவதாக அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

அவரது அக்கருத்து வெளிப்பாடு பல தரப்புக்களினின்றும் கடும் எதிர்ப்பலைகளை உருவாக்கியது. அதனையடுத்து, தான் அவ்வித அர்த்தத்தில் கருத்து வெளியடவில்லையெனப் பீற்றர் ஹரோல்ட் தெரிவிக்க வேண்டியதாயிற்று. தாம் முன்னர் தெரிவித்த கருத்தை தாம் தவறான அர்த்தத்தில் தெரிவிக்கவில்லையென பீற்றர் ஹரோல்ட் தெரிவித்த சமாதானத்தை ஜே.வி.பியினர் ஏற்கமறுத்தனர்.

### பீற்றர் ஹரோல்டை தூற்றிய ஜே.வி.பியினர்

பீற்றர் ஹரோல்ட் ஒரு பச்சோந்தி எனவும, பொய்க்காரன் எனவும் ஜே.வி.பியினர் பிரசாரம் மேற்கொள்ளத் தலைப்பட்டனர்.

நாளுக்கு நாள் இவ்விடயத்தைப் பிரபல்யப்படுத்திய தமது ஆதரவாளர்களைத் திரட்டி பீற்றர் ஹரோல்டை அரசு நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டுமென ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் பொதுக் கூட்டங்களையும் ஜே.வி.பியினர் ஏற்பாடு செய்தனர். இருந்தாற்போலிருந்து பீற்றர் ஹரோல்ட் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவுக்குப் புறப்பட்டுச்சென்றார்.

இதனை ஜே.வி.பியினர் ஏதோ ஒரு விதமாகக் கற்பனை செய்துகொண்டனர். ஜே.வி.பியினரும் அவரது ஆதரவாளர்களும் இதனைத் தமது அமைப்புக்கான சுயவிளம்பரமாகப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டிருக்கலாம்.

'நாங்கள் காட்டிய எதிர்ப்பு பலனளித்துவிட்டது. உலகவங்கி எமக்குப் பயந்துவிட்டது.

வெள்ளைப் புலி பீற்றர் ஹரோல்ட்டுக்குப் போக்கிடம் அற்றுப்போய்விட்டது'.

இவ்வாறு ஜே.வி.பியினர் தமக்குத் தாமே சுய விளம்பரம் செய்துகொண்டனர்.

இதன்காரணமாக உலகவங்கியின் இலங்கைக் கிளைக் காரியாலயம் தாமதிக்காது அறிக்கையொன்றினை வெளியிடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

சுனாமி அனர்த்த நிவாரண உதவி தொடர்பான பேச்சுகளுக்காகவே பீற்றர் ஹரோல்ட் மணிலாவுக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்றவாறு அமைந்தது அந்த அறிக்கை.

உலகவங்கியின் கொழும்புக்கிளைக் காரியாலயத்தில் இவ்வறிக்கை வெளியானதும் ஜே.வி.பியினரின் வாய்ச் சம்பிரதாயங்கள் அடங்கிப்போக நேர்ந்தது. காற்றுப்போன பலூன் போன்று அவர்கள் பேச்சு மூச்சற்றுப் போயினர்.

இருந்தபோதிலும் மீண்டும் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு ஜே.வி.பியினர் களத்தில் இறங்கினர்.

பீற்றர் ஹரோல்ட் ஒரு சிங்கள இனத்துரோகி. அவரொரு வெள்ளைப்புலி, அவரது இத்துரோகத் தனத்துக்குத் தண்டனையாக முச்சந்தியில் நிறுத்திக் கசையடி வழங்கவேண்டும் எனத தெரிவித்தனர்.

### தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றாத ஜே.வி.பி.

ஜே.வி.பி.யினர் ஸ்ரீல.சு.கட்சியுடன் தேர்தல் கூட்டொன்றை ஏற்படுத்தி அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் உலகவங்கி இலங்கை மீது விதித்திருக்கும் தடையை இரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்வோமென வாக்குறுதியொன்றினை வழங்கியிருந்தனர்.

அவ்வாக்குறுதியைப் பதவிக்கு வந்த பின்னர் நிறைவேற்ற ஜே.வி.பி.நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று பீற்றர் ஹரோல்ட் ஜே.வி.பயினர் கூறுவது போன்று துரோகததனம் புரிந்திருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்காதல்லவா? தேர்தல் வாக்குறுதியை பதவிக்கு வந்ததும் மறந்து விடுவதனால் ஏற்படும் சிரமம் தற்போது ஜே.வி.பியினருக்குப் புரிந்திருக்கும்.

உலகவங்கியை நாட்டிலுள்ள கிராமிய வங்கியைப் போன்றதொன்றெனவே ஜே.வி.பியினர் கருதுகின்றனர் எனத் தோன்றுகிறது. இது அவர்களது அறிவீனத்திற்கும் சீரற்ற பணபாட்டுக்கும் ஒரு உதாரணமாகக் கொள்ளத் தக்கது.

இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் ஏகாதிபத்திய நாடுகள் ஏனைய சிறு நாடுகளைத் தமது ஆக்கிரமிப்பின் மூலம் தமது நேரடி நிர்வாகத்தின் கீழ் வைத்திருந்தன. இரண்டாம் உலகப் போரின் பின்னர் எந்த ஒரு நாடும் மற்றொரு நாட்டை ஆக்கிரமித்து தனது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர இயலாத நிலை உருவாயிற்று.

ஆனால், வல்லரசு நாடுகள் ஏதோ ஒரு வகையில் ஏனைய நாடுகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வசதியேற்படுத்தும் வகையில் கண்டுபிடிக்கப்பட்ட குறுக்குவழி உபாயமே உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகிய அமைப்புக்களின் உருவாக்கமாகும்.

## ஜே.வி.பியின் குதர்க்கம் ஒருபோதும் எடுபடாது!

இன்று உலகம் முழுவதையும் கட்டுப்படுத்தி நிர்வகிப்பது இவ்விரு அமைப்புக்களுமே யாகும். ஜனநாயக நாடொன்றில் எத்தகைய கொள்கை கொண்ட அரசு அமைய வேண்டுமென்பது இவ்விரு அமைப்புக்களின் விருப்பத்துக்கமையவே தீர்மானிக்கப்படுகிறது. சகல நாடுகளினதும் கொள்கைகளும் செயற்பாடுகளும் இவ்விரு அமைப்புக்களினாலே கட்டுப்படுத்தப்படுகின்றன.

இவ்விரு அமைப்புக்களின் கொள்கைகளுடன் அனுசரித்துச் செல்லும் தரப்புக்களே நாடுகளில் ஆட்சிப்பீடம் ஏறமுடிகிறது. நேரடியாக இல்லாவிடினும் மறைமுகமாக இவ்விரு அமைப்புக்களும் சகல நாடுகளினதும் நிர்வாகததல் தலையிட முடிகிறது. அந்த அளவுக்குச் சர்வதேச மட்டத்தில் இவ்விரு அமைப்புகளும் பலம் வாய்ந்து விளங்குகின்றன.

இத்தகைய நிலையில் ஜே.வி.பி போன்ற கூச்சல் குழப்பக்காரர்களை உலகவங்கி ஒரு பொருட்டாக மதிக்க முன்வருமா? இவர்களைப் போன்ற வெற்றுவேட்டு அரசியல்வாதிகளை உலகவங்கி எள்ளளவும் பொருட்டாக மதிக்கப் போவதில்லை.

வெறுமனே வாய்ச்சவடால் மூலம் சிக்கல்களை உருவாக்க முயல்வோரை உலகவங்கி பொருட்படுத்துவதில்லைத்தான். ஆயினும், உலகவங்கியின் நிலைப்பாடுகளுக்கு எதிராகச் செயறபட முனைவோரை உலகவங்கி வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கப்போவதில்லை.

அந்த வகையில் உலகவங்கியின் அதிருப்திக்குள்ளாகும் நாடுகள் சிரமத்தை எதிர்நோக்க வேண்டி ஏற்படுவது வழக்கமானதொன றாகும். வாய்ச்சவடால் வேறு; திட்டமிட்டுக் குறுக்கீடு செய்வது வேறு.

இவ்வித கருத்தை வெளியிடுவதால் ஏகாதிபத்திய வாதத்தை ஆதரிப்பவனென என்னை எவரும் எடைபோட்டு விடக்கூடாது; நான் மார்க்சீஸ வாதத்தை ஆதரிப்பவன் இன்றைய உலகின் அரசியல் நிலையை வைத்தே இவ்விதம் சிந்திக்க முடிகிறது. ஜே.வி.பியினரின் இவ்வித எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் கோஷங்களும் வஞ்சகத்தனத்தின் வெளிப்பாடு? பொதுமக்களது கண்களில் மண்தூவ விழையும் சித்து விளையாட்டு இது.

### சந்திரிகா பதவிக்கு வர வழிவகுத்தது உலகவங்கி

உலகவங்கியின் விருப்பப்படியே இந்நாட்டின் அரசியற் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. 1994ஆம் ஆண்டில் சந்திரிகாவைப் பதவியில் அமர்த்த பின்னணியில் உலகவங்கியே செயற்பட்டது. அந்த நன்றிக் கடனுக்காக இன்றும் சந்திரிகா உலகவங்கிக்கு விசுவாசமானவராகச் செயற்படும் வகையிலேயே நிர்வாகத்தை நடத்தி வருகிறார்.

ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச்சர்கள் கூட உலகவங்கியின் கொள்கைகளையும் திட்டங்களையும் ஆதரிக்கும் வகையில் செயற்படுகின்றனர். உலகவங்கியின் ஆலோசனையின் பேரிலேயே போர்நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட நேர்ந்தது. தற்போது கூட மீண்டும் பேச்சில் ஈடுபடுமாறு சந்திரிகாவுக்கு அழுததம் கொடுப்பதும் உலகவங்கியே;

சமாதானப் பேச்சுகளுக்கு எதிராக ஜே.வி.பி. மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் நீண்ட காலத்துக்கு மக்களது ஆதரவை பெறப்போதில்லை. இன்னும் சிறிய காலத்தில் பொதுமக்கள் ஜே.வி.பியினரின் இது தொடர்பான கருத்துக்களை அசட்டை செய்ய ஆரம்பிப்பர். உலகவங்கியின் ஆலோசனைகளுக்கமைவாகவே சந்திரிகா தற்போது ஜே.வி.பியினரை அசட்டை செய்து அவர்களது கருத்துக்களுக்கு செவிசாய்க்காத விதத்தில் செயறபட ஆரம்பித்துள்ளார்.

வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் இந்த நாட்டில் செயற்படுவதை தடுக்கப்போவதாக ஜே.வி.பியினர் முன்னர் பொதுமக்களுக்கு வாக்குறுதிகளை வாரி வழங்கியிருந்தனர்.

ஆனால், அந்த வகையில் எவ்வித நடவடிக்கைகளையும் ஜே.வி.பி இதுவரையில் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. அதுவுமின்றி அவர்களால் அவ்விதம் செயற்படவும் இயலாதென்பதே உண்மையாகும்.

இலங்கையின் பிரபலமான இருபத்தைந்து அரச நிறுவனங்களை வெளிநாடுகளுக்கு விற்றுவிடுவதற்கு 'பார்க்' நிறுவனம் கேள்விப் பத்திரங்களைக் கோரியுள்ளது.

ஜே.வி.பிக்குச் சொந்தமான 'லங்கா' என்ற பத்திரிகையில் கூட இக்கேள்விப் பத்திரங்கள் கோரும் விளம்பரம் பிரசுரமாகியுள்ளது. இது உலகவங்கியின் ஆலோசனையைச் செயற்படுத்தும் ஒரு நடவடிக்கையாகும். ஜே.வி.பி. கூட இச் செயற்பாடுகளை ஏற்றே அரசில் செயற்பட்டாக வேண்டியுள்ளது.

### மக்களின் கவனத்தை திசை திருப்பும் முயற்சி

இன்று அத்தியாவசிய பாவனைப் பொருள்களின் விலை ரொக்கெட் வேகத்தில் உயர்ந்து செல்கிறது. வேலைவாய்ப்புகள் அருகியுள்ளமையால் இளைய சமுதாயம் விரத்தி நிலை அடைய வேண்டியுள்ளது. பொதுமக்களது நாளாந்த வாழ்க்கை சிக்கலும் சிரமமும் மிக்கதாக மாறியுள்ளது.

ஜே.வி.பியினர் இன்று இவை குறித்து வாயே திறப்பதில்லை. மாறாக பொதுமக்களது கவனத்தைத் திசைதிருப்பும் முயற்சியாக பீற்றர் ஹரோல்ட் தொடர்பான பிரச்சனையைப் பெரிதுபடுத்தி அவரை நாட்டை விட்டு வெளியேற்றுமாறு பொய்க்கோஷம் போடுவதில் அக்கறை காட்டி வருகின்றனர்.

ஜே.வி.பியினர் இந்நாட்டின் பொது மக்களுக்கு இதை விட வேறெந்த வஞ்சனை செய்யமுடியும்? அவர்களது கோஷத்துக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் வரை இதே விடயத்தை பூதாகாரமாக்கி பொதுமக்களை ஏமாற்றி அவர்களைத் திசை திருப்புவதே ஜே.வி.பியினரின் நோக்கமாகும்.

### ஹரோல்ட் கூறியது முற்றிலும் உண்மை

நான் பீற்றர் ஹரோல்டை பெரிய அளவில் மதிக்கின்றேன். ஏனெனில், அவர் உண்மையொன்றை துணிச்சலுடன் வெளிப்படுத்தியிருக்கிறார். உள்ளதை உள்ளபடி சொல்ல விழைவது நியாயமானதொரு விடயமல்லவா?

தமிழ்ப் பகுதியில் அங்கீகரிக்கப்படாத சுதந்திர நிர்வாக அமைப்பொன்று செயற்படுவது இரகசியமானதொன்றல்ல: சூரிய சந்திரர்கள் உலகில் இருப்பது எத்துணை உண்மையோ, அதுபோன்றதே இவ்வித தனியான நிர்வாக அமைப்பு செயற்படுவதென்ற உண்மையும் எனலாம்.

தமக்கென தனியான நிர்வாகக் கட்டமைப்பு, தனியான பாதுகாப்புப்படை, பொலீஸ், நீதித்துறை, நீதிமன்றங்கள், சிறைக் கூடங்கள் என்பவை மட்டுமன்றி தனியான வரிஅறவீடு நடைமுறையும் அப்பகுதியில் அந்த அமைப்பால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அப்பகுதியில் சந்திரிகா அரசின் சட்ட திட்டங்கள் அனுசரிக்கப்படுவதில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பு தமக்கென வகுத்துச் செயற்படுத்திவரும் சட்ட திட்டங்களுக்கமையவே, நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் அனுமதியின்றி அந்த நிர்வாகப் பிரதேசத்தில் வேறெவரும் பிரவேசிக்க இயலாது. ஆனால், உலக நாடுகளிலெதுவும் இதுவரையில் அத்தகைய நிர்வாக அமைப்பை அங்கீகரிக்கவில்லை என்பதே யதார்த்தமாகும்.

இதனாலேயே பீற்றர் ஹரோல்ட் அதனை அங்கீகரிக்கப்படாத நிர்வாக அமைப்பு எனக் குறிப்பிட நேர்ந்தது. அந்த வகையில் தவறிழைத்தது யார்? இலங்கையின் அரசியல்வாதிகள் வெளிப்படையாகத் தெரிவிக்கத் தயங்கும் - அவர்களுக்குக் கசப்பானதாய் அமையும் - அந்த உண்மையை பீற்றர் ஹரோலட் எவ்வித தயக்கமுமில்லாமல் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார். அதுவே யதார்த்தம்.

தமிழ்ப் பகுதியில் அவ்விதம் அங்கீகரிக்கப்படாத தனி நிர்வாக அமைப்பொன்று செயற்படுவதான உண்மையை ஜே.வி.பியினால் உணர முடியாதிருப்பதற்கு எவ்வித காரணமும் இருக்கமுடியாது.

**தமிழில் - வியெஸ்ரி**

அவ்வித தனியான நிர்வாகமுறை செயற்படவில்லையென ஜே.வி.பி. உறுதியாக தெரிவிக்குமானால், ஜே.வி.பி. தலைவர்களாலோ அல்லது உறுப்பினர்களாலோ விடுதலைப் புலிகளின் முன் அனுமதியின்றி அப்பிரதேசத்துள் பிரவேசிக்க இயலாதிருப்பதேன்?

அப்பிரதேசத்தைப் பற்றிக் குறிப்பிடுவதை ஒரு புறம் தள்ளி வைப்போம்; அப்பிரதேசத்தை அண்டிய எல்லைப்புறக் கிராமங்களுக்குக் கூட ஜே.வி.பி. தலைவர்களால் பிரவேசிக்க இயலாதுள்ளதே?

### யாழ். சென்ற வீரவன்ஸவுக்கு என்ன நடந்தது?

அண்மையில் பீற்றர் ஹரோல்டை நாட்டை விட்டு வெளியேற்றுவோம் எனச் சூளுரைத்து, அமர்க்களம் அதிரக் கூப்பாடு போட்டு விடுதலைப் புலிகள் அமைப்புடனான தொடர்புகளை அரசு துண்டித்துக் கொள்ளவேண்டுமென மிரட்டி வரும விமல் வீரவன்ஸ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வேட்டிக்குள் மறைந்து கொண்டு, பதுங்கிப் பதுங்கி அரச கட்டுப்பாட்டில் இயங்கும் யாழ்.குடாநாட்டுப் பகுதிக்குச் சென்றிருந்தாரல்லவா? என்ன நடந்தது? நடந்ததென்னமோ முற்றிலும் புதுமையான சம்பவமே.

தமது யாழ்.குடாநாட்டு விஜயத்துக்கு பொதுமக்கள் இவ்வளவு தூரம் எதிர்ப்புத் தெரிவிப்பர் என்பதை விமல் வீரவன்ஸ கூட எதிர்பார்த்திருககமாட்டார். அவர் கனவில் கூட அவ்விதம் எதிர்பார்க்கவில்லை.

கத்தி, பொல்லு, துடைப்பக்கட்டை, விளக்குமாறு என கையில் கிடைத்த பொருள்களை எடுத்துக்கொண்டு தற்காலிகமாக அகதி முகாமில் தங்கியிருந்த பொதுமக்கள் பெருஞ் சேனைப் படையெடுப்புப் போன்று ஆக்ரோசத்துடன் வீரவன்ஸவைத் திரும்பிப் போய்விடுமாறு கோஷமிட்டார்களே!

வீரவன்ஸ தனது ஆடைகளைப் பறிகொடுக்காதிருப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷயின் பின்னால் பயந்து பதுங்கி முகததைத் தொங்கப் போட்டபடி ஒருவாறு அப்பொதுமக்களது தாக்குதலில் இருந்து மீளமுடிநதது. இது அவ்வேளையில் உலகமுழுதிலும் பிரசித்தி பெற்றதொரு செய்தியாய் அமைந்தது.

விமல் வீரவன்ஸவுக்கு யாழ்ப்பாணத்தில் ஏறபட்ட இத்தகைய அனுபவம் எதனை உணர்த்துகின்றது? தமிழ்ப் பகுதிகளில் நிர்வகிக்கப்படும் அங்கீகரிக்கப்படாத சுதந்திர தமிழ் இராசசியத்துகககு தமிழ் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அது அவர்கள் தாமாகத் தமக்கென தேர்ந்தெடுத்துள்ள நிர்வாக அமைப்பு

இதற்கு மேலும் ஜே.வி.பியினர் எதனை நிறுவ முயல்கின்றனர்? இந்தவகையில், அங்கீகரிக்கப்படாத சுதந்திரமான ராச்சியமொன்று நிர்வகிக்கப்பட்டு வருவதில் தவறுகாண இயலாது.

அத்தகைய நிர்வாக அமைப்புச் செயற்படுவதை - உண்மையை - பீற்றர் ஹரோல்ட் வெளிப்படுத்தியது தான் தவறு எனச் சாதிக்க ஜே.வி.பியினர் முயல்கின்றார்களா?

இதற்கு மேலான வஞ்சகத்தனம் ஏதாவது இருகக இயலுமா? மீண்டும் ஒரு தடவை நான பீற்றார் ஹரோல்ட்டுக்கு மரியாதை தெரிவிக்கின்றேன்.

பொய்பேசுவது துரோகத்தனம்!

பொய் பேசுவதைத் தவிர்ப்பது சிறப்பாகும்!!. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது மண்டபங்கள் திறந்துவைப்பு

தென்மராட்சி,மே16

பளைப் பிரதேசத்தில் முல்லையடி, கோவில் வயல் ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபங்கள் கடந்த 12ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகத்தினால் திறந்துவைக்கப்பட்டன.

அப்பகுதிக் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பயன்பாட்டுக்கென இக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன. (எ-117)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்

பூவுலகில் பூவாய் 14 - 03 - 1951

வானுலகில் சோதியாய் 18 - 04 - 2005



### திருமதி விமலேஸ்வரி ஆனந்தம்

அன்பின் திருவுருவாய் அவனியில் சிறந்தமலரே!
பண்பின் உறைவிடமாய் பார்போற்ற வாழ்ந்தவளே!
கனிவு கொண்டெமை காசினியில் காத்தவளே!
பணிவெனும் பண்புடை பாவையர் குலவிளக்கே!
உம்பிரிவால் வாட்டமுறும் உறவோரெமக்கு
உளமாற வார்த்தை சொல்வோர் பாரிலுண்டோ?
அப்பன் அடிசார்ந்த அம்மையே! அருமணியே!!
உந்தன் ஆத்மா சாந்தியடைய
ஐயன் பாதம் பணிந்து போற்றுகின்றோம்.

நாளைமறுதினம் (18-05-2005) புதன்கிழமை நண்பகல் அன்னாரின் இல்லத் தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போச னத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிகமுகவரி:
வெளிச்சவீட்டு ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.
நிரந்தரமுகவரி:
வேல்வீதி,
மயிலிட்டி. (45379(46-14-45-26)

கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்.


## பாம்புக்கடிக்கு இலக்கான குடும்பப் பெண் மரணம்!

யாழ்ப்பாணம்,மே16

கிளிநொச்சியில் பாம்புக்கடிக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் மரணமானார்.

கிளிநொச்சி சாந்தைபுரத்தைச் சேர்ந்த கந்தசாமி வனரோஜா (வயது-47) என்ற ஐந்து பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணியளவில் தனது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த சமயம் பாம்புக் கடிக்கு இலக்கான இவர், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் மாலை 7 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி மூலம் அனுப்பிவைக்கப்பட்டிருந்த இவர் இடை வழியில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் மரண விசாரணையின் நிமித்தம் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (3-13)

## செங்கலடியில் இளம் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு,மே 16

மட்டக்களப்பு செங்கலடியில் நேற்றுமுன்தினம் காலை இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். இலுப்பையடியைச்சேர்ந்த பொன்னம்பலம் தமிழ்வாணன் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே கொல்லப்பட்டுள்ளார்.

செங்கலடிச் சந்தியில் உள்ள சந்தைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் வழியில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் இவரைச் சுட்டுவிட்டு தப்பிவிட்டனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர். (ஜ-3-13)

## கல்வியியல் கல்லூரியின் நினைவுப் பேருரையில் இன்று...

யாழ்ப்பாணம், மே16

யாழ்தேசிய கல்வியியற் கல்லூரியின் 5 ஆம ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் நினைவுப் பேருரைத் தொடரில் இரண்டாவது நாளான இன்று பேராசிரியர் ப.சந்திரசேகரத்தின் நினைவுப் பேருரை இடம்பெறும்.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தலைமையில் பேருரை இடம் பெறும்.

விடுதலைக்கான கல்வியியல் ஆசிரியர் - மாணவர் உறவின் பெறுமானங்கள் - கல்வியியல் தத்துவார்த்த வரலாற்றுப் போக்கு என்னும் விடயத்தை உள்ளடக்கியதாக குமாரசாமி சண்முகநாதன் நினைவுப் பேருரையாற்றுவார். (எ-203)


## கண்ணீர் அஞ்சலி

எங்கள் அன்புக்குரிய பேராசிரியர்
கா.குகபாலன் அவர்களின்
மூத்த புதல்வி
திருமதி திருமகள் கார்த்திகேயன்

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கபிலா காலணியகம்,
யாழ்ப்பாணம்.

(45398)(38-14-45-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில் 14 - 04 - 1942

மண்ணின் மடியில் 16 - 04 - 2005



### அமரர் பொன்னுச்சாமி தேவராசா

எம் குடும்பத்தின் அகல் விளக்காய்த் திகழ்ந்து
எம்மீது பாசமழை பொழிந்து
பண்பிலோர் பெருமகனாய்த் திகழ்ந்த
எம் வாழ்வின் வழிகாட்டியே!
உங்கள் நினைவுகள் ஆறாதையா
எங்கள் நெஞ்சங்களில்....

இன்று (16-05-2005) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வேம்படி,
வல்வெட்டித்துறை. (45344)(26-14-45)

உங்கள் நினைவுகளால் வாடும்:
குடும்பத்தினர்.

## இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

**Muthayamal Educational Institutions**

RASIPURAM - 637 408, NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கிகரீக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலஅண்டுகள் | உட்பிரவேச தகமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் யூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 011-4512591** for prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.

email : peter@... (சி-42822)


## கேள்வி அறிவித்தல்

உணவு விவசாய ஸ்தாபன (OSRO/SRL/401/JPN) விதை உற்பத்தித் திட்டத்தின்கீழ் பரந்தன் விவசாயத்திணைக்கள விதை உற்பத்திப்பண்ணை காரியாலய கட்டட (OFFICE BUILDING) நிர்மாணத்திற்கான கேள்வி அறிவித்தல்.

பரந்தன் விவசாயத்திணைக்கள விதை உற்பத்திக்காரியாலய கட்டட நிர்மாண வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் தரம் எம் 6 அல்லது மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து உணவு விவசாய ஸ்தாபனத்தின் தேசியத்திட்ட இணைப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் வவுனியா 99/4, ஸ்ரேசன் வீதியில் அமைந்துள்ள உணவு விவசாய ஸ்தாபனத்தின் தேசியத்திட்ட இணைப்பாளர் காரியாலயத்தில் இருந்து 26-05-2005 வரை வழமையான வேலைநாள்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 9மணி தொடக்கம் மாலை 4மணி வரையும் மீளளிக்கப்படாத வைப்புத்தொகைப் பணமாக ரூபா 1000/=ஐச் செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் சீல் பண்ணப்பட்டு வேலையின் பெயரை OSRO/SRL/401/JPN-2 என்று கடித உறையின் இடது மூலையில் குறிப்பிட்டு *உணவு விவசாய ஸ்தாபனத்தின் இலங்கைப் பிரதிநிதி, இல. 202 பௌத்தலோக மாவத்தை கொழும்பு-7 (FAO Representative, NO-202, Bauddhaloka Mawatha, Colombo-07)* என்ற விலாசத்திற்கு 15-06-2005 அன்று மாலை 4மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைத்தல்வேண்டும்.

கலாநிதி ஏ.எஸ்.விவேகானந்தன்
OSRO/SRL/401/JPN இன் தேசிய திட்ட இணைப்பாளர்,
இல99/4, ஸ்ரேசன் வீதி,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயின் தாக்கம் வருடம் தோறும் அதிகரிப்பு

## சுகாதாரத் திணைக்கள புள்ளிவிவரங்கள் தெரிவிப்பு

குருநகர்,மே16

இலங்கையில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் எண்ணிக்கையும் அதன்மூலம் இறப்போர் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாக கடந்த 10 வருடங்களாக எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களில் இருந்து தெரிய வருகிறது.

சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

1995ஆம் ஆண்டு 440பேரும், 1996ஆம் ஆண்டு ஆயிரத்து 294 பேரும், 1997ஆம் ஆண்டு 980 பேரும், 1998ஆம் ஆண்டு ஆயிரத்து 275 பேரும், 1999ஆம் ஆண்டு ஆயிரத்து 688 பேரும், 2000ஆம் ஆண்டில் ஆயிரத்து 203பேரும், 2001ஆம் ஆண்டில் 5 ஆயிரத்து 986 பேரும, 2002ஆம் ஆண்டில் 8 ஆயிரத்து 931 பேரும், 2003ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 749 பேரும், 2004ஆம் ஆண்டில் 15 ஆயிரத்து 434 பேரும் இந்நோயால் பீடிககப்பட்டனர்.

இதே நேரத்தில் 1995ஆம் ஆண்டில் 11 பேரும், 1996ஆம் ஆண்டில் 54 பேரும், 1997ஆம் ஆண்டில் 17 பேரும், 1998ஆம் ஆண்டில் 8 பேரும், 1999ஆம் ஆண்டில் 14 பேரும், 2000ஆம் ஆண்டில் 37 பேரும், 2001ஆம் ஆண்டில் 54 பேரும், 2002ஆம் ஆண்டில் 64 பேரும், 2003 ஆம் ஆண்டில் 32 பேரும், 2004ஆம் ஆண்டில் 88 பேரும் இந்நோயின் தாக்கத்தினால் இறந்துள்ளனர்.

இதேநேரத்தில், யாழ். மாவட்டத்தில் 2002 ஆம் ஆண்டின் பின்னரே இந்நோயின் தாக்கம் உருவாகியுள்ளதாக சுகாதாரத் திணைக் களத தின் புள்ளிவிவரக் குறிப்புகள் மூலம் தெரிய வந்துள்ளது.

2002ஆம் ஆண்டில் 19 பேரும், 2003ஆம் ஆண்டில் 126 பேரும், 2004ஆம் ஆண்டில் 153 பேரும் இந்த நோய்த்தாக்கத்துக்குள்ளாகியுள்ளதுடன், 2004ஆம் ஆண்டில் 2 பேர் மரணத்துக்குள்ளாகியுள்ளனர் எனவும் புள்ளிவிவரங்கள் தெரிவித்தன.

மழைவீழ்ச்சியைத் தொடர்ந்து நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் பெருகத் தொடங்குகின்றன. அப்போது, இந்நோயைப் பரப்பும் நுளம்புகளான ஈடிஸ் இஜிப்ரஸ், ஈடின் அல்மோபிக்டன் எனும் நுளம்புகளால் இந்நோய் உருவாகின்றது. இந்நோய் பெரும்பாலும் சிறுவர்களையே எளிதில் தாக்கிவிடுகிறது.

யாழ். மாவட்டத்தில் தற்போது போக்குவரத்துச் சேவைகள் சீரடைந்து கொழும்பிலிருந்து பயணிகள், வியாபாரிகள் சுலபமாக வந்துசெலகின்றனர். இவர்களில் எவருக்காவது டெங்குக காய்ச்சல் ஏற்பட்டிருந்தால் அவர்கள் மூலமும் இந்நோய் தொற்றக்கூடும் எனவே, இந்நுளம்புகள் பரவாமல் தடுப்பதற்கு நுளம்பு உருவாககம் தடைசெய்யப்படவேண்டியது அவசியம். சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் இந்நுளம்புகள் உருவாகாமல் தடுக்கமுடியும்.

(எ-51)

## நீங்காத நினைவில் 45 நாள்கள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 - 04 - 1928 | 02 - 04 - 2005 |



### அமரர் சிவஞானபண்டிதர் செல்லம்மா

எங்கள் அன்புத் தெய்வம் எம்மைவிட்டுப் பிரிந்து
நாற்பத்தைந்து நாள்களும் ஆனதோ?
உங்கள் தோற்றம் மறைந்து போனாலும்
துயரங்கள் மறையவேயில்லை
நாங்கள் வாழுங்காலம் வரை உங்கள் ஞாபகங்கள்
எங்கள் மனதைவிட்டு அகலாது!

மாறாம்புலம்,
அல்வாய் வடமேற்கு,
அல்வாய். (45426)(53-11-12-30)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

We Serve

யாழ்.லயன்ஸ் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் தலைவருமான லயன் பேராசிரியர் கா.குகபாலன அவர்களது அன்பு மகள்

### திருமதி திருமகள் கார்த்திகேயன்

அவர்களது திடீர் மறைவினால் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உறுப்பினர்கள்
யாழ்.லயன்ஸ் கழகம்.

(45403)(11-12-30)

## கல்வியியலின் கண்ணீர் மடல்...



### திருமதி கார்த்திகேயன் திருமகள்

(கல்வியியலாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

கல்வியியல் முற்றத்தில்
கமழ்ந்த (சு) வாசம்!
வண்ணச் சாலையில் வலம்வந்த
சின்னச் சோதரி எங்கள்
எண்ணங்களில்
ஏமாற்றம் தந்து
எங்கம்மா சென்றாய்?
ஆங்கில மிடுக்கும்
ஓங்கிய தமிழும்
வாங்கிய வனப்பே,
நூலக வலங்களின்
நூதன வதனமே,
குகமகவின்
கார்த்திகேயப் பூவே,
அகம் நோகுதம்மா உன்
அந்திச் செய்தி!

கருவறைக்குள் புகுந்து
காவுகொள்ள
காலனுக் கென்ன கட்டளை?
ஜம எஜமானத்துடன்
சமரிட முடியவில்லையே...!
புதிய உதயம்
ஒன்றிற்காய்
பூரித்திருந்தவளே,
இதயம் இடிந்ததம்மா உன்
இழப்புக் கேட்டு...
இறைவியின்
இத நாமம் கொண்ட
இளையவளே - இனியவளே,
உறையாத
உணர்வுகளோடு
என்றும் எம் -
உடனிருப்பாய் சோதரி ......

(சி-42852)(53-30-11-12) யாழ்ப்பாணம், தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்.

## தவறிவிட்டது

சி.அனுராஜ் என்பவருடைய அடையாள அட்டைகள், லைசென்ஸ், ஏ.ரீ.எம்.காட் என்பன (சிவப்பு நிறக்கவருடன்) நேற்று மாலை மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் ஆனைக்கோட்டைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் நிலவு டொட் கொம்மில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொலைபேசி இலக்கம்:
0777 769751 (சி-42853)(30-)

## சுத்திகரிப்புத் தொழிலாளர் தேவை

எமது விடுதியில் அறைகள், வளவுகள் சுத்தஞ் செய்வதற்கு சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தேவை.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
**பிள்ளையார் இன்**
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2829
021 222 5595
(45425)(53-11-12)


மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.
சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த
ஐதீக
காட்சி நேரம்: 10.30 a.m., 2.30.p.m., 6.30 p.m.,9.30 p.m.
(C/42294)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
50 ஆவது நாளை நோக்கி
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த





சந்திரமுகி (ரீல்ஸ்)
காட்சிகள: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/41890)(20-16-17)

ராஜா யாழ்ப்பாணம்.
தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த
தேவதையைக் கண்டேன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)
விரைவில் இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
அறிந்தும் அறியாமலும்
(C/41381)(12-17)

நாதன்ஸ் சினிமா ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
இன்று முதல்
ஷாம், ரிச்சட், பலேட், ரோகிணி நடித்த
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)
(C/41387)(20-16-17)


## இராணுவத்துக்கு தகவல் கொடுப்பவர் சூட்டில் படுகாயம்

கொழும்பு, மே16

நீர்கொழும்பில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

மட்டக்களப்பு, ஒந்தாச்சி மடத்தைச் சேர்ந்த எஸ்.ரவிச்சந்திரன் என்பவரே இவ்வாறு சுடப்பட்டார். நகைக்கடை ஒன்றில் பணியாற்றி வந்த இவர் இராணுவத்தினருக்குத் தகவல் கொடுப்பவர் என்று விசாரணையிலிருந்து தெரியவந்திருப்பதாக பொலீஸ்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ)

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு தம்பிப்பிள்ளை



மாதகலைச் சேர்ந்த கார்த்திகேசு தம்பிப்பிள்ளை அவர்கள் 14.05.2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும் சிவபாக்கியம் (இராசமணி) அவர்களின் அன்புக கணவரும், வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் நாகம்மா, சிவக்கொழுந்து ஆகியோரின் பாசமிகு சகோதரனும் விமலசந்திரன், விமலாதேவி, பாலசந்திரன், திலகராணி, குணபாலன், சிவபாலன், தவபாலன், வன்னியசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2005) திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைக்காக மாதகல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செலலப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரதான வீதி,*
*மாதகல்.* (45424)(53-11-12-30)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### திருமதி ரூத் புஸ்பமணி பிறைசூடி



கொழும்பைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ரூத் புஸ்பமணி பிறைசூடி அவர்கள் நேற்று (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் காத்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற D.S.பிறைசூடி (முன்னாள் போட்டோ சினக்ஸ் பொறியியலாளர், கொழும்பு, பண்டத்தரிப்பு நிரஞ்சனி வோச் வேக்ஸ் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருதிருமதி J.A.சாரங்கப்பானி அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி ஸ்ரீநாதன் - பிறைசூடியின் அன்பு மருமகளும் றற்றா (பிரான்ஸ்), காலஞ்சென்ற றோஸ் (சுவிஸ்), ராணி (பண்டத்தரிப்பு), ராஜி (பிரான்ஸ்), றோமா (பிரான்ஸ்), றூபி (ஆஸ்திரேலியா), ரதி (சுவிஸ்) ஆகியோரின் பாசம் நிறைந்த தாயாரும், பூலோக இந்திரன் (பிரான்ஸ்), சேவியர் (சுவிஸ்), திலகசூரியர் (பண்டத்தரிப்பு), ராஜன் (பிரான்ஸ்), ராமநாதன் (பிரான்ஸ்), பகீரதன் (ஆஸ்திரேலியா), மோகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், றோய், ஈசா, மைக்கல், நொஷ்ஷிக்கா, ரஜீவ், அஞ்சலி (பிரான்ஸ்), ரஜோபன், பிரியாந்தி, நிஷ்ஷாந்தி, நிஜோபன் (சுவிஸ்), வெரோணியா, வெறொஜன், வேஜினியா (பண்டத்தரிப்பு), மனோஜன், நிரோஜன் (பிரான்ஸ்), றுக்ஷின், யதுஷின், திபுசன், ரிஷ்ஷிக்கா (பிரான்ஸ்), ஆதித்தன், அகிம்ஷன் (ஆஸ்திரேலியா), ரவாயல், றொட்னி (சுவிஸ்) ஆகியோரின் ஆசை அருமைப் பேர்த்தியும், நொஷ்ஷான், கிறிஸ்டீன், ரயான் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான சுலமன், சாமுவேல், ஜேகப், தேவதாசன் மற்றும் சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.05.2005) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பண்டத்தரிப்பு C.S.I. (தென்னிந்திய திருச்சபை), சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிரஞ்சனி,*
*சண்டிலிப்பாய் வீதி,*
*பண்டத்தரிப்பு.* (45427)(30-11-12)

தகவல்:
மகள்மார் குடும்பம்.

### பொன்னுசாமி இந்திரநாதன் (இந்திரன்)

(EX Bank of Ceylon shroff)

வண்ணார்பண்ணை College Lane ஐ பிறப்பிடமாகவும், இலங்கைநாயகி அம்மன் கோவிலடி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் தற்பொழுது கனடாவில் வசித்தவருமான பொன்னுசாமி இந்திரநாதன் அவர்கள் 13.05.2005 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் கருணாதேவியின் அன்புக் கணவரும், சந்திரன், ரேணுகா, துஷ்யந்தி ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற பொன்னுசாமி - சுந்தரவல்லி தம்பதியினரின் அன்பு மகனும் துரையப்பா (சோதி) - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் இராமநாதன், சத்தியநாதன், பத்மாவதி, ஜெயராணி, திலகவதி, Dr. தர்மவதி ஆகியோரின் சகோதரனும் மனோகரன் (ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் யாழ்.), சறோஜாதேவி, தவறஞ்சிதன், கிருபாகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.05.2005) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதுச் செம்மணி வீதிச் சந்தி,*
*நல்லூர் வடக்கு,*
*கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.* (45424)(53-11-12-30)

தகவல்:
மனோகரன்.
T.P.: 0777 735470

### சந்திரசேகரகுருக்கள் குருசாமிசர்மா

கரணவாயைப் பிறப்பிடமாகவும், பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியை விதிவிடமாகக் கொண்ட சந்திரசேகரகுருக்கள் குருசாமிசர்மா அவர்கள் நேற்று (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவராஜசர்மா (இலங்கை வங்கி உதவி முகாமையாளர்), சசிகரசர்மா (கொழும்பு) அவர்களின் தந்தையும், சசிகலா, புனிதவதி ஆகியோரின் மாமனாரும் சசீந்திரா (நுண்கலைக் கழகம், யாழ். பல்கலைக்கழகம்), திசாகரசர்மா, சிவாகரசர்மா, ரிஷிகேசசர்மா, சஷிகேசசர்மா, செந்தூரசர்மா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2005) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*6ஆம் ஒழுங்கை,*
*பாற்பண்ணை வீதி,*
*திருநெல்வேலி.* (45429)(30-11-12)

தகவல்:
கு.சிவராஜசர்மா
(மகன்).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கல்விச் செயற்பாட்டைக் கைவிட்ட

# 10 சிறுவர்கள் ஒருவார காலத்தில் நீதிமன்றில் முன் நிறுத்தப்பட்டனர்

## சிறுவர் இல்லங்களில் வைத்துப் பராமரிக்க உத்தரவு

யாழ்ப்பாணம், மே16

குடாநாட்டில் கல்விச் செயற்பாடுகளைக் கைவிட்டு வருமானம் பெறும் தொழில்களில் ஈடுபட்டு வந்த 10இற்கு மேற்பட்ட சிறுவர்கள் யாழ். நீதிமன்றத்தில் முன்நிறுத்தப்பட்டனர்.

கல்விச் செயற்பாடுகளைச் கைவிட்டு வருமானம் ஈட்டும் தொழில்களில் ஈடுபடும் சிறுவர்களை சிறுவர் இல்லங்களில் வைத்துப் பராமரிப்பது என்பது கடந்த 7ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆலயங்களில் கற்பூரம் மற்றும் பொருள்கள் விற்பனையில் ஈடுபடும் - வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்படும் - வீதிகளில் பிச்சை எடுக்கும் - சிறுவர்களைப் பிடித்து நீதிமன்றத்தின் முன்நிறுத்துமாறு யாழ். நீதிமன்றம் பெண்கள் - சிறுவர்கள் பொலீஸ் பிரிவையும் சிறுவர் பாதுகாப்பு மாவட்டக் குழுவையும் கேட்டிருந்தது. இதன்படி கடந்த ஒருவார காலத்தில் 10 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் யாழ். நீதிமன்றத்தில் பொலீஸாரால் முன் நிறுத்தப்பட்டனர்.

அவர்களை அவர்களது பெற்றோரிடம் இருந்து பிரித்து சிறுவர் இல்லங்களில் சேர்ப்பித்து அவர்களுக்கு கல்வி வசதி செய்து கொடுக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெற்றோர் தமது பிள்ளைகளை சிறுவர் இல்லங்களில் பார்வையிடவும் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (3)

## கண்டிக் கூட்டத்தில் அனுரா பங்குபற்றார்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அமைப்பின் இன்றைய கூட்டத்தில் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா கலந்துகொள்ளமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்றைய கூட்டத்தின்போது அமைச்சர் விசேட உரையொன்றை ஆற்றுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், ஐரோப்பாவிற்கான அவசர விஜயமொன்றை மேற்கொண்டு அமைச்சர் நேற்று நாட்டிலிருந்து புறப்பட்டார்.

சுமார் ஒரு வார காலம் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க வெளிநாட்டில் தங்கியிருப்பாரெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-3)

## கிளாலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் குறித்து சாவகச்சேரி நீதிவான் பா.சுப்பிரமணியம் நேரில் விசாரணைகளை நடத்தினார்.

இறந்தவர் அறையில் நித்திரையில் இருந்த சமயம் சக சிப்பாயான ரவீந்திரா என்றவர் ஜன்னல் ஊடாக அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்றும்-

அதன் பின் தன்னைத் தானே சுட்டார் என்றும் - விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சடலத்தை கொழும்பு சட்டவைத்திய அதிகாரியின் மேற்பார்வையில் பிரேத பரிசோதனை செய்து பின் உறவினர்களிடம் கையளிக்கும்படி உத்தரவிட்டார் நீதிவான். (3)

## விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை விவரமாக அவர்களுக்கு விவரித்து தமது அந்த முயற்சிகளுக்கு ஜே.வி.பியினரின் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் கோருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக புலிகளுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது குறித்து இம்மாதம் முதல் வாரத்தில் ஏற்கனவே ஜே.வி.பியினருக்கு ஜனாதிபதி விளக்கியிருந்தார்.

அந்தப் பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிளோடு செய்யாமல் வடக்கு - கிழக்குத் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு செய்துகொள்ளவேண்டும் என்ற ஒரு திருத்த யோசனையை இந்தச் சந்திப்பின் போது ஜே.வி.பி. முன்மொழிந்திருந்தது. ஆனால், அந்தத் திருத்த யோசனையை ஏற்க ஜனாதிபதி குமாரதுங்க இணங்கவில்லை என்று தெரிகின்றது.

இந்தப் பின்னணியிலேயே மீண்டும் ஜனாதிபதி நாளை இரவு ஜே.வி.பியினரைச் சந்தித்து இது தொடர்பாகத் தமது உத்தேசத் திட்டத்துக்கு ஆதரவு தரும்படி அவர்களைக் கோரவிருக்கின்றார் எனத் தெரிகின்றது. (க-3-12)

## கண்டி மாநாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கண்டி நகரப் பாதுகாப்புக்கு மாத்திரம் சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பொலீஸாரும், பல நூற்றுக்காணக்கான இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர். கண்டி நகரை அண்டிய பகுதிகளில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவோர்களைக் கைதுசெய்யுமாறு பொலீஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்திருக்கிறார்.

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள், உயர்மட்ட அரச அதிகாரிகள், 50இற்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் மற்றம் ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோரும் மேலும் பல அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றனர். (க-3-12)

## பொதுக்கட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னத்தை ஜனாதிபதி எடுத்தார்.

அரசின் இந்த முயற்சிக்கு ஆளும் கூட்டமைப்புக்குள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்படும் சூழ்நிலையில் இதற்கு என்ன பரிகாரம் காண்பது என்பது பற்றி ஜனாதிபதி நீண்டநேரம் இந்தச் சந்திப்பின்போது ஆராய்ந்தார் எனக் கூறப்படுகின்றது.

இந்தவிடயத்தை முதலில் மக்களிடம் முன்வைப்பதுதான் சிறந்ததென்று அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்ததையடுத்து அதற்காக ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றுவதென முடிவு செய்யப்பட்டதாம்.

இன்று இடம்பெறும் நாட்டு மக்களுக்கான உரையின்போது பொதுக்கட்டமைப்பைத் தாம் செய்தே தீரவுள்ளாரென்பதை ஜனாதிபதி அடித்துக்கூறுவாரென அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏன் இந்த பொதுக்கட்டமைப்பு? இதன் நன்மை என்ன? இதை செய்வதற்கான காலஎல்லை என்பன குறித்து இந்த உரையின் போது ஜனாதிபதி மக்களுக்கு விளக்கவுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் இந்த உரை தேசிய தொலைக்காட்சி உட்பட தொலைக்காட்சி சேவைகள், வானொலி ஆகியவற்றில் அஞ்சல் செய்யப்படும் என்றும் தெரிகின்றது. (க-3-12)

## தமிழீழத் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்படவேண்டும் என்ற எமது தேசியத் தலைவரின் கனவிற்கும் எதிர்பார்ப்புக்கும் அமைவாக ஒரு மருத்துவமனைக்கான அடிக்கல்லினை நட்டுள்ளோம்.

தாயக மருத்துவமனையின் பணியென்பது துன்பப்பட்ட எங்கள் தேசத்திற்கும் மக்களுக்கும் ஓர் ஆறுதலளிக்கின்ற வகையிலான சேவையினை எதிர்காலத்தில் வழங்கப் போகின்றது. அந்தவகையில் தாயக மருத்துவமனை விரைவில் அமைக்கப்பட்டு மக்களுக்கு பணியாற்றவுள்ளது. குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் எமது மருத்துவ நிபுணர்களின் உற்சாகமான செயற்பாடும் ஈடுபாடும் தாயக மருத்துமனையின் உருவாக்கத்தில் பெரும் பங்கை வகிக்கின்றது.

புலம்பெயர்ந்து வாழும் எமது மருத்துவர்கள் போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு அமைதிச் சூழல் ஏற்பட்ட ஆரம்பகாலத்தில் பெருமளவில் தாயகம் திரும்பியிருந்தனர் போரால் பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கும் போராளிகளுக்கும் தம்மால் இயன்ற உதவிகள் வழங்க வேண்டுமென்ற ஆர்வத்தோடும் துடிப்போடும் பெருமளவு மருத்துவர்கள் தாயகம் வந்திருந்தனர். ஆனால் அவர்கள் மருத்துவம் செய்யக்கூடிய அளவிற்கு மருத்துவ வளம் எமது மண்ணில் இல்லாதிருந்தது.

போர்க் காலத்திலேயே உள்ள வளங்களை வைத்துக்கொண்டுதான் மருந்துவப் பணிகளை எமது மருத்துவ நிபுணர்கள் முன்னெடுத்தார்கள். மக்களைக் காப்பதற்கும் போராளிகளைக் காப்பதற்கும் முழு அர்ப்பணிப்புடன் மருத்துவர்கள் தம்மால் இயன்ற பணிகளைச் செய்தார்கள். ஆனால் மேலதிகமாக அதிநவீன சிகிச்சையளிக்க வேண்டிய தேவை ஏற்படும்போது மக்களுக்கோ போராளிகளுக்கோ சிகிச்சையளிக்க முடியாத நிலையிருந்தது. அதற்குக் காரணம் தாயகத்தில் அதிநவீன மருத்துவ வளங்கள் இல்லாமையாகும். புலம் பெயர்ந்து சென்ற மருத்துவ நிபுணர்கள் தாயகம் திரும்பிய போது எமக்கே பெரும் தயக்கம் இருந்தது. பெருமனதோடு, சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு மருத்துவர்கள் வரும்போது அவர்களுக்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடிய சூழல் எங்களிடம் இல்லாத நிலையிருந்தது. இந்நிலையில் தான் எமது தேசியத் தலைவர் எமது மக்கள் மருத்துவத் தேவைகளுக்காக பல இடங்களுக்கு அலைந்து திரியாமல் இருக்க நிறைவானவசதிகளுடன்ஒரு மருத்துவமனை தமிழர் தாயகத்தில் கட்டியெழுப்பப்படவேண்டும் என்ற எண்ணப்பாட்டினை வெளிப்படுத்தியிருந்தார்.

அவருடைய எண்ணக்கருவே புலம்பெயர்ந்த மக்களின் உதவியுடன் தாயக மருத்துவமனையாக அடிக்கல் நடப்பட்டுள்ளது - என்றார் சு.ப.தமிழ்ச்செல்வன். (து-க-3-12)

## தாயகம் திரும்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினர், மணற்திட்டில் தவித்த, உயிர்தப்பிய 7பேரையும் சனிக்கிழமை மாலை மீட்டனர்.

பின்னர் அவர்கள் தலைமன்னார் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மீட்கப்பட்டவர்களில் இரண்டு பெண்கள் உடனடியாக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். நான்கு ஆண்களும் ஒரு சிறுவனும் நேற்று மன்னார் நீதிவானின் முன்னிறுத்தப்பட்டனர்.

பதில் நீதவான் எம்.எம்.சபுறுதீன், ஆண்கள் நால்வரில் இருவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். ஏனையவர்களை விடுவித்ததுடன், அவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டு பெண்களும் இன்று நீதி மன்றத்தின் முன்னிறுத்தப்படுவார்கள் என்று பொலீஸார் கூறினர்.

தப்பியவர்களில் ஒருவரான முத்தையா கணேஷ் (வயது 32) என்பவர் தனது தந்தையும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்தார்.

இந்தப் பரிதாபச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை அவர்களது குழந்தை ஆகியோரும் உயிரிழந்தனர் என்று கணேஷ் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக தமிழ்நாட்டில் இருந்து தாயகம் திரும்பும் ஈழ அகதிகள் இத்தகைய ஆபத்தான பயணங்களையே மேற்கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்க்கது. (து-க)

## சந்திரிகாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி செயலகம் செய்யாதிருந்தது.

பின்னர் ஜனாதிபதி இந்தியா செல்வது ஒத்தி வைக்கப்பட்டுள்ளபோதிலும், யசூசி அகாஷியை சந்திப்பதற்கான நேர அனுமதி நேற்று மாலை வரை ஜப்பான் தூதரகத்துக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்தப் பின்னணியில் ஜனாதிபதியைச் சந்திக்க காத்திருந்து ஏமாந்த நிலையில் அகாஷி நேற்றுக் காலை கண்டிக்குப் புறப்பட்டுச் சென்றார். கண்டியில் உதவும் நாடுகள் கூட்டத்தில் பங்குபற்றும் அகாஷி சிலசமயம் அங்கு வைத்து ஜனாதிபதி குமாரதுங்கவைச் சந்திக்கக் கூடுமென சில வட்டாரங்கள் தெரிவித்தன. (க-3)


### கீல்வாத மூட்டு வீக்கம்

கீல்வாத மூட்டு வீக்கம் குணப்படுத்தமுடியாதது என உலகம் இதுவரை எண்ணியது. கீல்வாத மூட்டு வீக்கம் வைரஸினால் உருவாகிறது. அதனை நாங்கள் வைரஸ் எதிர்ப்பு ஆயுள்வேத மருந்தினால் சந்தேகத்திற்கு இடமின்றிக் குணப்படுத்துவோம்.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOL APPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org
A BOI Approved & ISo 9001:2000 Qms Certifed Company
(சி-41632)(29-14-17)

### புதிய கணினிப் பயிற்சி நெறிகள்

பதிவுக் கட்டணம் முற்றிலும் இலவசம்

New Batches Start On : - 18.05.2005 - 21.05.2005

- Diploma in Microsoft Office 2003
- Diploma in Desk Top Publishing
- Diploma in Internet Technology
- Diploma in Video Mixing
- Diploma in Accounting Package
- Diploma in Hardware Engineering
- Diploma in Computer Programming

3-5 Months

மேலதிக விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
T.P:- 021-222 3335, 0773 151200

### Physics (Personal Class)

Mr. ம.ஸ்பெல்மன்
(ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர்)

| A/L 2007 | A/L 2006 |
| --- | --- |
| பொறியியல் | இலத்திரனியல் |
| ஆரம்பம் 17.05.2005 | ஆரம்பம் 18.05.2005 |
| செவ்வாய் 5 -7 p.m. | புதன் 6.30 - 7.30 a.m. |

'அன்பகம்' கலைவாணி வீதி, சித்தன்கேணி.


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி செல்லமுத்து

(ஓய்வுபெற்ற அதிபர்)

சின்னத்தம்பி செல்லமுத்து அவர்கள் நேற்று (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - கண்ணகியின் அன்பு மகனும், கற்பகத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தெய்வானை, கந்தையா (எழுதுவினைஞர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஸ்ரீநிவாசன் (பிரதேச செயலர், சாவகச்சேரி), ஜெகநாதன் (ஜேர்மனி), இராசேஸ்வரி, இராசயோகானந்தம் (யோகானந்தம் கடை, துன்னாலை), விவேகானந்தன் (கனடா), மனோன்மணி, இந்து, ராகுநாதன் (கனடா), சிவயோகம், சிவலிங்கம் (கட்டார்), சிவஞானம், லலிதா (சுருக்கெழுத்தாளர், யாழ். நீதிமன்றம்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இராசரத்தினம் (கோப்பாய் அரசினர் வைத்தியசாலை), யோகேந்திரன், லோகிதராஜா, இராஜசிங்கம் (ஜேர்மனி), சறோஜினி, கமலாதேவி (ஜேர்மனி), சரஸ்வதிப்பிள்ளை (ஆசிரியர், குடமியன் அ.த.க.பாடசாலை), சுகாசினி (கனடா), அமலா (கனடா) ஆகியோரின் மாமனாரும் மோகனமுரளி, பிரசாந்தினி, பாமா, கிருசாந்தன், கிருபாகரன், பிரிந்தா (கனடா), கோபிராம், நேருசாந் (ஜேர்மனி), நவீதன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2005) திங்கட்கிழமை 12 மணிக்கு நடைபெற்று, கியான் மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

போதர மடம்,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.
(சி-42854)(30-11-13)

தகவல்:
ஸ்ரீநிவாசன் (மகன்).

### அம்பலம் கந்தையா சுந்தரம் (A.K.S)



(உரிமையாளர் A.K.S அரிசி ஆலை, A.K.S ரான்ஸ்போட், A.K.S மோட்டோர்ஸ்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் கந்தையா சுந்தரம் அவர்கள் நேற்று (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

லிங்கவாசா,
கட்டுக்காணி வீதி,
சாவகச்சேரி. T.P.:0777-898338
(42855)(30-11-13)

தகவல்:
மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவன[illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org